முன்னுரை

தெசலோனிக்கே பட்டணம் பழங்காலத்தில் மக்கெதோனியா தேசத்தில் பிரசித்தி பெற்ற பட்டணமாக விளங்கிற்று. அப்போஸ்தலர் பவுலுக்கு மக்கெதோனியாவில்போய் சுவிசேஷ ஊழியம் செய்யுமாறு விசேஷித்த அழைப்பு உண்டாயிற்று (அப் 16:9,10). தேவனுடைய தெய்வீக அழைப்பை ஏற்று அப்போஸ்தலர் பவுல் துரோவாவில் கப்பல் ஏறி, சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்திற்கும் நேராய் ஓடி, அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றுக்கு தலையானதும், ரோமர் குடி யேறினதுமான பிலிப்பி பட்டணத்திற்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சில நாள் தங்கியிருந்தார். பிலிப்பி பட்டணத்தில் அப்போஸ்தலர் பவுலின் ஊழியம் மிகவும்ஆசீர்வாதமாக நடைபெற்றது.

பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கு ஆசீர்வாதத்தோடு சேர்ந்து உபத்திரவமும் உண்டாயிற்று. அந்தப் பட்டணத்தில் பவுலையும் சீலாவையும் சிறைச்சாலையில் அடைத்தார்கள். தேவன் அவர்களை அற்புதமாய் சிறைச்சாலையிலிருந்து விடுவித்தார். அங்குள்ள சகோதரர்கள் பவுலுக்கு ஆதரவாயிருந்தார்கள். அதன் பின்பு பவுல் பிலிப்பி பட்டணத்திலிருந்து மற்ற இடங்களுக்கு ஊழியம் செய்ய புறப்பட்டுப்போனார்.

பிலிப்பி பட்டணத்திலிருந்து அம்பிபோலியா, அப்பொல்லோனியா ஆகியவற்றின் வழியாய்ப் பிரயாணம் செய்து, பவுலும் அவருடைய உடன் ஊழியரும் தெசலோனிக்கே பட்டணத்திற்கு வந்தார்கள். அப்போஸ்தலர் பவுல் அந்தப் பட்டணத்தில் ஒரு சபையை ஸ்தாபித்தார். பவுலும் சீலாவும் அங்கு ஊழியம் செய்கையில், அந்தப் பட்டணத்தார் இவர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். அங்குள்ள விசுவாசிகள் பவுலையும் சீலாவையும் பத்திரமாகப் பாதுகாத்து, பெரேயாவுக்கு அனுப்பினார்கள்.

பவுல் அங்கு தீமோத்தேயுவையும் சீலாவையும் விட்டுவிட்டு, அங்கிருந்து அத்தேனே பட்டணத்திற்குப் புறப்பட்டுப் போனார். சீலாவும் தீமோத்தேயுவும் அத்தேனே பட்டணத்திற்கு வந்தபோது, பவுல் தீமோத்தேயுவை தெசலோனிக்கே பட்டணத்திற்கு அனுப்பினார். அவர்களுடைய சுகசெய்தியை விசாரிக்கவும், விசுவாசத்தில் அவர்களை உறுதிபண்ணவும் பவுல் தீமோத்தேயுவை அங்கு அனுப்பினார் (1தெச 3:2).

பவுல் மறுபடியும் தீமோத்தேயுவை தெசலோனிக்கே பட்டணத்திற்கு அனுப்பினார். இந்தமுறை தீமோத்தேயுவோடுகூட சீலாவையும் சேர்த்து அனுப்பினார். அவர்கள் இருவரும் மக்கெதோனியா தேசத்திலுள்ள சபைகளை விசாரிப்பதற்காகப் புறப்பட்டுப் போனார்கள். பவுலோ அத்தேனே பட்டணத்தில் தனித்திருந்தார் (1தெச 3:1). பவுல் அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்குப் பிரயாணம் செய்தார். அங்கு அவர் ஒரு வருஷமும் ஆறுமாதமும் தங்கியிருந்து ஊழியம் செய்தார். பவுல் கொரிந்து பட்டணத்தில் தங்கியிருந்த சமயத்தில் தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள சபையாருக்கு இந்த நிருபத்தை எழுதினார். புதிய ஏற்பாட்டில் பவுல் எழுதிய இந்த நிருபம், கொலோசேயர் நிருபத்திற்குப் பின்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் கால அட்டவணையைப் பார்க்கும்போது, பவுல் தெசலோனிகேயருக்கு எழுதின இந்த நிருபமே அவர் எழுதின முதலாவது நிருபமாயிருக்கிறது.

1 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள சபையாரை இயேசுகிறிஸ்துவுக்குள் வாழ்த்துகிறார் (1தெச 1:1). இந்த நிருபத்தை எழுதும்போது பவுல் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்து நிருபத்தை ஆரம்பிக்கிறார் (1தெச 1:2-5). தெசலோனிக்கேயர் மத்தியில் சுவிசேஷ ஊழியம் கர்த்தருடைய கிருபையினால் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது (1தெச 1:6-10).

கிருபையும் சமாதானமும் 1தெச 1:1

1தெச 1:1. பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

அப்போஸ்தலர் பவுலே இந்த நிருபத்தின் ஆசிரியர். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது தன்னோடு சில்வானுவையும், தீமோத்தேயுவையும் சேர்த்துக்கொள்கிறார். சில்வானு என்பது சீலாவின் மறுபெயர். பவுல் தெசலோனிக்கேய சபையிலுள்ள விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தை எழுதுகிறார். இந்தச் சபையில் யூதமார்க்கத்திலிருந்தும், புறஜாதி மார்க்கத்திலிருந்தும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் இந்தச் சபையைப்பற்றிச் சொல்லும் போது, "பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபை" என்று சொல்லுகிறார்.

இந்தச் சபையிலுள்ள புறஜாதியார் தங்களுடைய விக்கிரகாராதனையிலிருந்து விடுதலைபெற்று, இப்போது மெய்யான தேவனை ஆராதிக்கிறார்கள். இந்தச் சபையிலுள்ள யூதர்கள் இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம் பண்ணபட்ட மேசியா என்று விசுவாசித்து அவரை ஆராதிக்கிறார்கள். விசுவாசிகளெல்லோருமே பிதாவாகிய தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் தங்கள் ஜீவனை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் சபையாரை வாழ்த்துகிறார். அவர்களை வாழ்த்தும்போது, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லி அவர்களை வாழ்த்துகிறார். தேவனிடத்திலிருந்து வரும் கிருபையே எல்லா சமாதானத்திற்கும், எல்லா ஆசீர்வாதங்களுக்கும்ஆதாரமாயிருக்கிறது. தேவனுடைய கிருபையினாலேயே நாம் சமாதானம் பெற்று சந்தோஷமாயிருக்கிறோம்.

நன்மையான எல்லா ஈவுகளும் தேவனிடமிருந்தே நமக்கு வருகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து வருகிற ஆசீர்வாதங்களை, அவருடைய பிள்ளைகள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். நமக்கு மாத்திரமே புத்திரசுவிகார உரிமையுள்ளது. அவிசுவாசிகளுக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தில் பங்குமில்லை, பாத்தியமுமில்லை. தேவனிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையும் அவிசுவாசிகளுக்கு கிடையாது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக, நாம் தேவனிடமிருந்து நன்மையான ஈவுகளைப் பெற்றுக்கொள்கிறோம்.

பிரியமான சகோதரரே
1தெச 1 : 2-5

1தெச 1:2. தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக, நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,

1தெச 1:3. நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து,

1தெச 1:4. எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

1தெச 1:5. எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தரைத் துதித்து இந்த நிருபத்தை எழுத ஆரம்பிக்கிறார். தெசலோனிக்கேயர் சபையாரைக் குறித்து பவுல் சந்தோஷமாகயிருக்கிறார். என்னென்ன காரியங்கள் நிமித்தம் அவர்களைக் குறித்து தனக்கு சந்தோஷம் உண்டாயிருக்கிறது என்பதை பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார். மேலும் அவர்களிடத்திலுள்ள எந்தெந்த கிரியையினிமித்தம் தான் கர்த்தரைத் துதிப்பதாகவும் இங்கு வரிசையாகச் சொல்லுகிறார். தெசலோனிக்கே சபையாருக்காக பவுல் நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரைத் துதிக்கிறார்.

சில சமயங்களில், நாம் வார்த்தைகளினால் கர்த்தரைப் பிரத்தியட்சமாகத் துதிக்காவிட்டாலும், நம்முடைய இருதயத்திலும் சிந்தையிலும் கர்த்தரைத் துதிக்கும் துதி எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும். கர்த்தர் நமக்குச் செய்த ஏராளமான நன்மைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பவுல் தேவனைத் துதிக்கும்போது, தன்னுடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தரிடத்தில் ஏறெடுக்கிறார். நாம் பெற்ற நன்மைகளுக்காக கர்த்தரைத் துதிக்கிறோம். நம்முடைய துதியில் ஜெபமும் சேர்ந்திருக்க வேண்டும். நாம் ஏற்கெனவே பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக கர்த்தரைத் துதிக்கிறோம். நாம் இனிமேல் பெற்றுக் கொள்ளப்போகிற நன்மைகளுக்காக கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் துதியும் இருக்க வேண்டும். ஜெபமும் இருக்கவேண்டும். தேவனுடைய கிருபை நமக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டும். அவர் நம்மைத் தொடர்ந்து பாதுகாத்து, பராமரிக்க வேண்டுமென்று கர்த்தருடைய சமுகத்தில் கருத்தாய் ஜெபிக்கவேண்டும்.

தெசலோனிக்கே சபையார் கர்த்தரிடமிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களை இரட்சித்திருக்கிறார். அவர்களிடத்தில் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமும், விசுவாசத்தின் கிரியைகளும் நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய விசுவாசம் உண்மையானது. ஜீவனுள்ளது. ஏனெனில் இது கிரியை செய்கிறது. கிரியை செய்யாத விசுவாசம் செத்ததாகயிருக்கும். மெய்யான விசுவாசமே கிரியை செய்யும். இதுவே ஜீவனுள்ள விசுவாசம்.

தெசலோனிக்கே சபையார் அன்பில் நிறைந்திருக்கிறார்கள். அன்பின் பிரயாசத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஆவியின் கனியில் நம்முடைய அன்பு வெளிப்படுகிறது. நம்முடைய மனதிற்குள் அன்பு இருக்கும்போது, நாம் அன்பான கிரியைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று பிரயாசப்படுவோம்.

தெசலோனிக்கே சபையாரிடத்தில் நம்பிக்கையும், பொறுமையையும் நிரம்பியிருக்கிறது. நம்முடைய நித்திய ஜீவனைப்பற்றி நமக்கு உறுதியான நம்பிக்கை இருக்கவேண்டும். நித்திய ஜீவனை நம்புகிறவர்கள் மாத்திரமே நம்பிக்கையின் பொறுமையை வெளிப்படுத்துவார்கள். நித்திய ஜீவனை நம்பாதவர்களிடத்தில் பொறுமை இருக்காது.

தெசலோனிக்கே சபையாரிடத்தில் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றும் நிரம்பியிருக்கிறது. இவையெல்லாம் தேவனுடைய கிருபையினால் நமக்குக் கிடைக்கிறது. அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். தேவனும்அவர்களுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். தேவனுடைய கிருபை இவர்களிடத்தில் நிரம்பி வழிகிறது.

தெசலோனிக்கே சபையார் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவர்களுடைய நற்குணத்திற்காக அப்போஸ்தலர் பவுலும், அவருடைய உடன்ஊழியரும், தேவனுக்கு முன்பாக இடைவிடாமல் தேவனை ஸ்தோத்திரிக்கிறார்கள்.

தேவன் நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார். இது அவருடைய கிருபை. நம்முடைய சுயபக்தியினாலோ அல்லது சுயபுத்தியினாலோ தேவகிருபையைச் சம்பாதிக்க முடியாது. தேவன் தம்முடைய கிருபையை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு அவருடைய கிருபை சம்பூரண ஆசீர்வாதமாக வரும்.

அப்போஸ்தலர்பவுல் தெசலோனிக்கே சபையாரை அழைக்கும்போது, "பிரியமான சகோதரரே" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும். நாம் தேவனுக்குப் பிரியமானவர்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாய், தம்முடைய சந்தோஷத்திற்காக நம்மைத் தெரிந்துகொண்டார். இது தேவனுடைய சுத்தகிருபை.

தெரிந்துகொள்ளப்பட்ட நம்மிடத்தில் விசேஷித்த தகுதி எதுவும் கிடையாது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆவியின் கனியை வெளிப்படுத்த வேண்டும். ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கே சபையாரை அன்பாய் நேசிக்கிறார். ஆகையினால் தான் அவர்களை "தேவனுக்குப் பிரியமான சகோதரரே" என்று அழைக்கிறார். அவர்கள் பவுலுக்கும் பிரியமானவர்கள். தேவனுக்கும் பிரியமானவர்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் செய்கிற சுவிசேஷ ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாகயிருக்கிறது. ஊழியத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், பவுல் தேவனை ஸ்தோத்திரம்பண்ணுகிறார். பவுல் அவர்கள் மத்தியில் செய்த ஊழியம் வீணாய்ப் போய்விடவில்லை. சுவிசேஷம் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டபோது, அவர்கள் சந்தோஷமாய் கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். தேவனுக்குப் பிரியமானவர்கள்.

சுவிசேஷம் அவர்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும் வந்தது. செவிக்கு விருந்து கொடுப்பதற்காக சுவிசேஷம் அறிவிக்கப்படுவதில்லை. நம்மை சந்தோஷப்படுத்துவதற்காக சுவிசேஷத்தை யாரும் பயன்படுத்துவதில்லை. நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். சுவிசேஷத்தின் செய்தி நம்முடைய இருதயத்தைத் தொட வேண்டும். நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, தேவனுடைய வல்லமையும் சுவிசேஷச் செய்தியோடு புறப்பட்டு வரும்.

நம்முடைய ஊழியத்தில் ஜெயமுண்டாகும் போது, நம்முடைய தெரிந்தெடுப்பு நமக்கு உறுதி பண்ணப்படுகிறது. நாம் தேவனுடைய காரியங்களை ஒரு கிளிப்பிள்ளையைப் போல திரும்பத் திரும்ப சொல்ல வேண்டியதில்லை. ஆவியானவர் தம்முடைய கிருபையினால் நமக்குக் கொடுக்கிற வார்த்தைகளை விசுவாசத்தோடு பேசவேண்டும். நம்முடைய இருதயத்தை கர்த்தர் தம்முடைய செய்தியினாலும் விருப்பத்தினாலும் நிரப்பியிருக்கிறார். ஆகையினால் நாம் சுவிசேஷத்தைச் சொல்லும்போது வசனத்தை மாத்திரம் சொல்லக்கூடாது. அதை தேவனுடைய வல்லமையோடும் சொல்ல வேண்டும். பரிசுத்த ஆவியோடும் சொல்லவேண்டும்.

தேவனுடைய வார்த்தையோடு பரிசுத்த ஆவியானவரும் இணைந்திருக்க வேண்டும். ஆவியானவரின் கிருபையில்லையென்றால் நம்முடைய வார்த்தைகளும் எழுத்துக்களும் செத்ததாகயிருக்கும். எழுத்து கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது. அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியிலே சுவிசேஷத்தை வெறும் வசனமாகப் பேசவில்லை. அதை தேவவல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் பேசுகிறார்.

சுவிசேஷத்தைக் கேட்ட தெசலோனிக்கே சபையாரும் சுவிசேஷத்தின் சத்தியத்தை உண்மையாய் விசுவாசிக்கிறார்கள். கர்த்தரிடத்திலும், அவருடைய வார்த்தையிலும் முழு நிச்சயத்தோடிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டு விடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். சுவிசேஷத்தின் வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பவுலைப் பற்றியும், அவருடைய உடன் ஊழியரைப் பற்றியும் நன்றாகத் தெரிந்திருக்கிறது.

பவுலும் அவருடைய உடன் ஊழியக்காரரும் தெசலோனிக்கேயர் மத்தியில் உண்மையாக ஊழியம் செய்கிறார்கள். பவுல் தங்களுக்கும் தெசலோனிக்கேயருக்கும் இடையிலுள்ள சம்பந்தத்தைச் சொல்லும்போது, "நாங்கள் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோம் என்று அறிந்திருக்கிறீர்களே" (1தெச 1:5) என்று எழுதுகிறார்.

மாதிரிகளானீர்கள்
1தெச 1 : 6-10

1தெச 1:6. நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி,

1தெச 1:7. இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.

1தெச 1:8. எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்ல வேண்டியதாயிராத படிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.

1தெச 1:9. ஏனெனில், அவர்கள் தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்,

1தெச 1:10. அவர் மரித்தோரிலிருந்து தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.

தெசலோனிக்கேயர் மத்தியில் அப்போஸ்தலர் பவுல் செய்த ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாகயிருக்கிறது. விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவையும், அப்போஸ்தலரையும், கிறிஸ்துவின் ஊழியக்காரரையும் நல்ல முன்மாதிரிகளாகப் பின் பற்றியிருக்கிறார்கள். இவர்களும் மற்ற விசுவாசிகளுக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள். தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷத்தினிமித்தமாய் மிகுந்த உபத்திரவமுண்டாயிற்று. உபத்திரவத்தின் மத்தியிலும் அவர்கள் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்போஸ்தலரையும் கர்த்தரையும் உண்மையாய்ப் பின் பற்றுகிறார்கள்.

ஊழியக்காரரின் ஜீவியம் விசுவாசிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். ஊழியக்காரர்கள் கர்த்தரை உண்மையாய்ப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் விசுவாசிகள் ஊழியக்காரரைப் பின்பற்றி, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறமுடியும். விசுவாசிகள் கர்த்தரைத்தான் நோக்கிப் பார்க்கவேண்டும். ஆனாலும் ஆரம்பகாலத்தில் அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, தங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்த ஊழியக்காரரை நோக்கிப் பார்ப்பார்கள். ஊழியக்காரரையே பின்பற்றுவார்கள். ஆகையினால் ஊழியக்காரர்கள் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். ஊழியக்காரர்கள் தங்கள் பேச்சிலும் கிரியையிலும் கர்த்தரைப் பின்பற்ற வேண்டும்.

தெசலோனிக்கே சபையிலுள்ள விசுவாசிகளுக்கு உபத்திரவம் வந்தாலும், சந்தோஷம் குறைந்துபோகவில்லை. தங்களுடைய உபத்திரவத்திலும் அவர்கள் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஒருவேளை அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்ததினால், கர்த்தருடைய திருவசனம் அவர்களுக்கு அதிகமான ஆறுதலையும், சந்தோஷத்தையும் கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் உபத்திரவத்திலும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டார்கள். நமக்கு உபத்திரவம் பெருகும்போது, பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் ஆறுதலும் பெருகும் (1தெச 1:6).

தெசலோனிக்கே சபையிலுள்ள விசுவாசிகள் மற்ற ஊரிலுள்ள விசுவாசிகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். முன்மாதிரியாக ஜீவிக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரைப் பற்றிச் சொல்லும் போது, அவர்களை "மாதிரிகள்" என்று சொல்லுகிறார். மற்ற விசுவாசிகள் தெசலோனிக்கேயருடைய சுபாவங்களை அப்படியே பின்பற்றுமளவுக்கு இவர்கள் நல்லமாதிரிகளாக இருக்கிறார்கள். தெசலோனிக்கேயர் அப்போஸ்தலரிடமிருந்து நல்ல மாதிரியைப் பெற்றுக்கொண்டார்கள். இப்போது இவர்கள் மற்ற விசுவாசிகளுக்கு நல்ல மாதிரிகளாக இருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஜீவியம், மற்றவர்களுக்கு நல்ல முன்உதாரணமாக இருக்கவேண்டும். நம்முடைய பேச்சிலும் செய்கையிலும் சுவிசேஷம் பிரதிபலிக்க வேண்டும். கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும்.

மக்கெதோனியாவிலும், அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் தெசலோனிக்கேயிலுள்ள விசுவாசிகள் மாதிரிகளாக இருக்கிறார்கள். தெசலோனிக்கேயாவில் மாத்திரம் ஊழியம் செய்தால் போதுமென்று இவர்கள் திருப்தியடையவில்லை. தங்களுடைய எடுத்துக்காட்டான ஜீவியத்தின் மூலமாய், இவர்கள் மக்கெதோனியாவிலும், அகாயாவிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரஸ்தாபம் பண்ணுகிறார்கள் (1தெச 1:7).

தெசலோனிக்கே விசுவாசிகள் மூலமாய் கர்த்தருடைய வசனம் எங்கும் பிரசித்தமாயிற்று. மக்கெதோனியாவிலும், அகாயாவிலும் மாத்திரமல்ல, மேலும் பல இடங்களுக்கும் கர்த்தருடைய வசனம் பிரசித்தமாயிற்று. சுவிசேஷ ஊழியம் வேகமாய்ப் பரவுகிறது. அப்போஸ்தலர் அங்கு சுவிசேஷத்தைக் குறித்து ஒன்றும் சொல்லவில்லை. தெசலோனிக்கேயா விசுவாசிகளின் எடுத்துக்காட்டான ஜீவியத்தின் மூலமாய், சுவிசேஷம் எங்கும் பிரசித்தமாயிற்று. தேவனைப்பற்றின அவர்களுடைய விசுவாசமும் எங்கும் பிரசித்தமாயிற்று. இவர்களுடைய எடுத்துக்காட்டான ஜீவியத்தின் மூலமாய் சுவிசேஷத்தை அநேகர் விரும்பி ஏற்றுக்கொள்கிறார்கள்.

தெசலோனிக்கே சபையார் சுவிசேஷத்தினிமித்தம் சந்தோஷமாயிருக்கவும், உபத்திரவத்தை அனுபவிக்கவும் ஆயத்தமாயிருக்கிறார்கள். இவர்களுடைய விசுவாசம் உறுதியாயிருக்கிறது. கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் இவர்கள் நிச்சயமாய் நம்புகிறார்கள். தங்களுடைய விசுவாசத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய வசனத்தை வாயினால் அறிக்கை செய்வதற்குப் பதிலாக, தங்களுடைய எடுத்துக்காட்டான ஜீவியத்தின் மூலமாய் அறிக்கை செய்கிறார்கள். இதனால் தேவனைப் பற்றின அவர்களுடைய விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று (1தெச 1:8).

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த ஆரம்ப காலத்திலேயே, அவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய விசுவாசத்தின் மூலமாய் அநேக நன்மையான காரியங்கள் நடைபெற்றது. அவர்கள் தங்கள் விக்கிரகங்களை விட்டு மெய்யான தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள். இயேசுகிறிஸ்துவே ஜீவனுள்ள மெய்யான தேவன் என்று அங்கீகரித்து, அவரை தங்கள் ஆண்டவராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டார்கள் (1தெச 1:9).

தெசலோனிக்கே சபையார் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (1தெச 1:10). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், அவருடைய வருகையை விசுவாசிகளாகிய நாம் ஜெபத்தோடும், விசுவாசத்தோடும், ஆர்வத்தோடும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும், கிறிஸ்தவ மார்க்கத்தின் விசேஷித்த அம்சமாகும். விசுவாசிக்கிற நமக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிகுந்த சந்தோஷமுள்ளதாகயிருக்கும். அவருடைய வருகையை நாம் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவர் நம்மை தம்மோடுகூட பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு நாம் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவோடு நித்திய காலமாய் ஜீவிப்போம். தேவனுடைய சமுகத்தில் நித்தியமாய் அவரைத் துதிப்போம்.

2 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் தான் போதித்ததைப் பற்றி எழுதுகிறார். பவுலின் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும் உண்டாகவில்லை (1தெச 2:1-6). பவுல் அவர்களுக்கு புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னார். தாய் தன்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்வதுபோலவும், தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுவதுபோலவும் பவுல் அவர்களுக்குப் போதகம்பண்ணினார் (1தெச 2:7-12). பவுலின் ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது (1தெச 2:13-16). பவுல் தெசலோனிக்கேயரைப் பார்க்க மனதாயிருந்தார். ஆனால் சாத்தானோ பவுலைத் தடைபண்ணினான் (1தெச 2:17-20).

எங்கள் போதகம் 1தெச 2 : 1-6

1தெச 2:1. சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லையென்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 2:2. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகுபோராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்.

1தெச 2:3. எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை.

1தெச 2:4. சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணின படியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.

1தெச 2:5. உங்களுக்குத் தெரிந்திருக்கிற படி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை. பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி.

1தெச 2:6. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை.

பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோர் கர்த்தர் தங்களுக்கு ஒப்புவித்திருக்கிற ஊழியத்தை, தெசலோனிக்கேயர் மத்தியிலே உண்மையாய் நிறைவேற்றியிருக்கிறார்கள். பவுல் இதைப் பற்றிச் சொல்லும் போது, "சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லையென்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்" (1தெச 2:1) என்று சொல்லுகிறார். பவுலின் ஊழியம் கனிகொடுக்காமல் வீணாய்ப் போய்விடவில்லை. அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை அவர்களுக்கு அறிவித்தார். கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம் தெளிவாகவும், உண்மையாகவும், சத்தியமாகவும் இருக்கிறது. அவர் தெசலோனிக்கேயர் மத்தியில் உலகப்பிரகாரமாக ஊழியம் செய்யவில்லை. தேவனுக்குள் தைரியங் கொண்டு, ஆவிக்குரிய ரீதியாகவே அவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார்.

பவுலும் அவருடைய உடன் ஊழியரும் தேவனுடைய சுவிசேஷத்தை தெசலோனிக்கேயருக்குச் சொல்லும்படி, அவர்கள் தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தார்கள். அவர்கள் பரிசுத்தமான ஆவியானவரால் ஏவப்பட்டு ஊழியம் செய்தார்கள். பரிசுத்தமான தைரியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஊழியத்தில் அவர்களுக்கு அநேக பாடுகளும், நிந்தைகளும், வெகு போராட்டங்களும் உண்டாயிற்று. இவற்றிற்கு மத்தியில் சோர்ந்துபோகாமல், கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்தார்கள்.

பிலிப்பி பட்டணத்தில் அப்போஸ்தலர்கள் அதிக பாடுபட்டு நிந்தையடைந்திருந்தார்கள். அதுபற்றி தெசலோனிக்கேயருக்கும் தெரிந்திருக்கிறது. பிலிப்பியில் பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தார்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் அவர்கள் விடுதலை பெற்று, தெசலோனிக்கே பட்டணத்திற்கு புறப்பட்டுப்போனார்கள். அங்கு தேவனுடைய சுவிசேஷத்தை தைரியத்தோடும், விடுதலையோடும் பிரசங்கம் செய்தார்கள்.

நல்ல காரியத்திற்காக பாடுகளை அனுபவிக்கும்போது, நம்முடைய தீர்மானம் உறுதியாயிருக்கும். அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினிமித்தமாய்ப் பாடுகளை அனுபவித்தார். சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினிமித்தம் அவருக்கு நிந்தை உண்டாயிற்று. வெகுபோராட்டம் உண்டாயிற்று. இந்த நிந்தையினாலும் போராட்டத்தினாலும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்னும் வாஞ்சையும் அவருக்குள் அதிகரித்தது. கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டும் என்னும் தீர்மானம் பவுலுக்குள் உறுதியாயிற்று. சுவிசேஷத்தைச் சொல்லும் படி பவுல் தேவனுக்குள் தைரியங் கொண்டார்.

சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்கள் தைரியமாய் ஊழியம் செய்யவேண்டும். எவ்வளவு போராட்டங்கள் வந்தாலும், எவ்வளவு நிந்தைகள் வந்தாலும், எவ்வளவு பாடுகள் வந்தாலும் சோர்ந்து போகாமல் தைரியங் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷ ஊழியத்தில் சோர்ந்து போகவில்லை. பாடுகளும், நிந்தைகளும், போராட்டங்களும் பவுலை சுவிசேஷ ஊழியத்திலிருந்து துரத்திவிடவில்லை. தேவனுக்குள் தைரியங்கொண்டு ஊழியம் செய்தார் (1தெச 2:2).

பவுல் கர்த்தருடைய ஊழியத்தை எளிமையாகவும், நேர்மையாகவும், பயபக்தியோடும் செய்தார். பவுலின் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும் உண்டாகவில்லை. அது கபடமுள்ளதாயிருக்கவில்லை (1தெச 2:3). இதனால் அப்போஸ்தலர் பவுல் மிகுந்த ஆறுதலடைந்திருக்கிறார். தன்னுடைய மனச்சாட்சியில் சுத்தமாயிருக்கிறார். தேவனுக்கு முன்பாக குற்றமற்றவராக, தெளிந்த சிந்தனையோடு ஊழியம் செய்திருக்கிறார். பவுலின் ஊழியத்தில் உண்மையிருந்ததினால், கர்த்தர் அந்த ஊழியத்தை ஆசீர்வதித்திருக்கிறார்.

பவுல் வஞ்சகத்தினால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. சுவிசேஷம் யாரையும் வஞ்சிப்பதில்லை. சுவிசேஷம் மெய்யானது. சுவிசேஷம் அசுத்தமானதுமல்ல. அது பரிசுத்தமுள்ளது. உண்மையும் பரிசுத்தமுமான சுவிசேஷத்தை பவுல் உண்மையான இருதயத்தோடு, பயபக்தியோடு பிரசங்கம் செய்கிறார். அப்போஸ்தலர் பவுலுடைய இருதயத்தில் வஞ்சகமோ, துராசையோ அல்லது கபடமோ இல்லை. அவர் பரிசுத்தமாயும், தெளிந்த சிந்தையோடும் இருக்கிறார் (1தெச 2:3).

தேவன் பவுலை உத்தமரென்று எண்ணியிருக்கிறார். சுவிசேஷ ஊழியத்தைப் பவுலிடத்தில் நம்பி ஒப்புவித்திருக்கிறார். பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் அவருக்குரியதல்ல. அது மனுஷருடைய சுவிசேஷமல்ல. அது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொருவரும், கர்த்தர் தங்களிடத்தில் நம்பி ஒப்புவித்திருக்கிற ஊழியத்தை உண்மையாயும், உத்தமமாயும் நிறைவேற்ற வேண்டும். அவர் நம்மை உத்தமர் என்று எண்ணி, நம்மிடத்தில் தம்முடைய ஊழியத்தை ஒப்புவித்திருக்கிறார்.

சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்கள் தேவனுக்குப் பிரியமுண்டாக பேச வேண்டும். மனுஷரைப் பிரியப்படுத்துவது நம்முடைய நோக்கமாயிருக்கக்கூடாது. அப்போஸ்தலர் பவுல் மனுஷருக்கல்ல, தன்னுடைய இருதயத்தைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறார் (1தெச 2:4).

கிறிஸ்துவின் சுவிசேஷம் மாயமான பகட்டுக்காக செய்யப்படுகிற ஊழியமல்ல. மனுஷருடைய பிரியத்தின்படி அல்லது மனுஷரைப் பிரியப்படுத்தும்படி சுவிசேஷ ஊழியம் செய்யக்கூடாது. நம்முடைய மாம்சத்தின் ஆசைகளெல்லாம் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும். நம்முடைய தீயசுபாவங்கள், தீயசிந்தனைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போக வேண்டும். தேவனுடைய பரிசுத்தம் நமக்குள் நிரம்பியிருக்க வேண்டும். விசுவாசத்தோடும், உண்மையோடும், பயபக்தியோடும், தேவனுக்கே பிரியமுண்டாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்.

தேவன் நம்முடைய இருதயங்களை சோதித்தறிகிறவர். நம்முடைய நோக்கங்களும், திட்டங்களும் தேவனுக்குத் தெரியும். அவருக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. அவர் நம்முடைய எல்லா செய்கைகளையும் அறிந்திருக்கிறார். தேவனிடத்திலிருந்து நமக்கு வெகுமதி வருகிறது. ஆனால் தேவனோ நம்முடைய இருதயங்களை சோதித்தறிந்தே, நமக்கு வெகுமதி கொடுப்பார்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார். அவர் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவில்லை. பொருளாசையுள்ளவராய் மாயம்பண்ணவுமில்லை. பவுல் உண்மையாய் ஊழியம் செய்தார் என்பதற்கு தேவனே சாட்சி. பவுலும் அவருடைய உடன்ஊழியரும் கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணுகிறார்கள். மனுஷர் தங்களைப் பாராட்ட வேண்டுமென்பதற்காகவோ அல்லது மனுஷர் மூலமாய் தங்களுக்கு ஆதாயம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவோ அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. தங்களுடைய பொருளாசையை நிறைவேற்றுவதற்கு சுவிசேஷத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தவுமில்லை. அவர்கள் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை.

சுவிசேஷ ஊழியத்தைச் செய்வதன் மூலமாய் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல. அவர் போஜனத்திற்காக ஊழியம் செய்யவில்லை. பவுல் மனுஷரால் வரும் மகிமையை தேடவில்லை. கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய பவுல் யாருக்கும் பாரமாயும் இருக்கவில்லை. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே பவுலின் வாஞ்சை. ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சுவிசேஷத்தின் சத்தியத்தை ஜனங்கள் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இதுவே பவுலின் இருதய வாஞ்சை. பவுல் மனுஷருடைய ஆத்தும இரட்சிப்பை மாத்திரமே தேடுகிறார். மனுஷரால் வரும் மகிமையை அவர் ஒருபோதும் தேடவில்லை.

புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும்
1தெச 2 : 7-12

1தெச 2:7. உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல,

1தெச 2:8. நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களான படியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறோம்.

1தெச 2:9. சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்.

1தெச 2:10. விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி.

1தெச 2:11. மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று,

1தெச 2:12. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டார். ஒரு தாயானவள் தன் பிள்ளைகளுக்கு பால் கொடுத்து காப்பாற்றுகிறதுபோல, பவுலும் அவருடைய உடன் ஊழியரும் அவர்கள் மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பட்சமாய் நடந்து கொள்கிறார்கள். அவர்களை ஆளுகை செய்ய வேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல. அவர்களுடைய ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண வேண்டும் என்பதே பவுலின் விருப்பம்.

பால்கொடுகிற தாயானவள் தன் பிள்ளையின் சேட்டைகளையெல்லாம் சகித்துக் கொள்வாள். தன் பிள்ளைகள் செய்கிற குறும்புகளைப் பெரிதுபடுத்தமாட்டாள். அவர்களுக்கு பால்கொடுத்து அவர்களை வளர்த்து ஆளாக்கவேண்டும் என்பதே தாயின் விருப்பமாகயிருக்கும். தாயானவள் தன் பிள்ளைக்கு எப்போதும் நன்மைதான் செய்வாள். தன் மடியில் வைத்து அதைக் கொஞ்சுவாள்.

அதுபோலவே பவுலும், அவருடைய உடன்ஊழியரும் தெசலோனிக்கேயரை மிகுந்த பாசத்தோடும், கரிசனையோடும் கவனித்துக் கொள்கிறார்கள். அவர்கள் மீது வாஞ்சையாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பட்சமாய் நடந்து கொள்கிறார்கள். தாயானாவள் தன் பிள்ளைகளுக்கு பால் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுவது போல, அப்போஸ்தலர்கள் தேவனுடைய சுவிசேஷத்தை அவர்களுக்கு அன்போடு அறிவிக்கிறார்கள்.

அப்போஸ்தலரின் வாஞ்சையும், பட்சமான சுபாவமும் இந்த வசனங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. தெசலோனிக்கேயர் அப்போஸ்தலருக்கு மிகவும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய நன்மையில் மிகுந்த அக்கரை காண்பிக்கிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய நன்மையையும், நித்திய நன்மையையும் மனதில் வைத்து, அவர்களுக்கு தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயருக்கு எப்போதுமே நன்மை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள்மேல் வாஞ்சையாயிருந்து தேவனுடையசுவிசேஷத்தை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அது மாத்திரமல்ல தங்கள் ஜீவனையும் அவர்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறார்கள் (1தெச 2:8). தெசலோனிக்கேயரின் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக, அப்போஸ்தலர்கள் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயருக்கு ஊழியம் செய்யும் போது, அவர்களில் ஒருவனுக்கும் அப்போஸ்தலர்கள் பாரமாயிருக்கவில்லை. தங்களுடைய போஜனத்திற்காக அப்போஸ்தலர்களே இரவும் பகலும் வேலை செய்கிறார்கள்.தெசலோனிக்கேயரிடமிருந்து அப்போஸ்தலர்கள் போஜனமோ, அல்லது வேறு எந்த சகாயமோ எதிர்பார்க்கவில்லை. தங்களுடைய ஊழியம் அவர்களுக்கு பாரமாயிருக்கக் கூடாது என்பதில் அப்போஸ்தலர்கள் மிகுந்த கவனமாயிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் தெசலோனிக்கேயருக்கு ஞாபகத்தில் இருக்கிறது (1தெச 2:9).

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தாலும், அவர் கூடாரம் பின்னுகிற தொழிலைச் செய்து ஜீவனம் பண்ணுகிறார். ஊழியத்தின் தேவைகளை கவனிப்பதற்காக அவரே இரவும் பகலும் தன்னுடைய கைகளினால் வேலை செய்கிறார். பவுலே தன்னுடைய போஜனத்திற்கு உழைத்துக்கொள்கிறார். இரவில் ஒரு பகுதியையும், பகலில் ஒரு பகுதியையும் வேலை செய்வதற்காக ஒதுக்கி, அந்த நேரத்தில் பிரயாசப்பட்டு உழைக்கிறார். இந்த உழைப்பு அவருடைய போஜனத்திற்குப் பிரயோஜனமாயிருக்கிறது. மீதமுள்ள இரவு வேளையிலும், பகல் வேளையிலும் அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய சுவிசேஷத்தை தெசலோனிக்கேயருக்கு அறிவித்து, அவர்கள் மத்தியிலே ஆத்தும ஆதாயம் ஊழியம் செய்கிறார்.

விசுவாசிகளாகிய அவர்களுக்குள்ளே அப்போஸ்தலர்கள் பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் நடக்கிறார்கள். தேவனுக்கு முன்பாகவும் விசுவாசிகளுக்கு முன்பாகவும் பரிசுத்தமாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய பரிசுத்தத்திற்கு தெசலோனிக்கேயரும், தேவனும் சாட்சிகளாகயிருக்கிறார்கள் (1தெச 2:10). அப்போஸ்தலருடைய இருதயத்தின் சிந்தனை பரிசுத்தமாயிருக்கிறது. இதற்கு தேவன் சாட்சியாயிருக்கிறார். அவர்களுடைய பேச்சும், கிரியையும், ஊழியமும் பரிசுத்தமாயிருக்கிறது. இதற்கு தெசலோனிக்கேயர் சாட்சிகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பரிசுத்தமாக ஊழியம் செய்யவேண்டும். ஊழியக்காரரைப்பற்றி விசுவாசிகளும், கர்த்தரும் நற்சாட்சி கொடுக்கவேண்டும்.

பவுலும் அவருடைய உடன்ஊழியரும் கர்த்தருக்கு முன்பாக நற்சாட்சியுள்ள விசுவாசிகளாகவும், அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரராகவும் இருக்கிறார்கள். ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நற்புத்தி சொல்லுகிறது போல, பவுலும் அவருடைய உடன்ஊழியரும், தெசலோனிக்கேயரில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொல்லுகிறார்கள். தாயானவள் தன் பிள்ளைகளை அன்போடும் பாசத்தோடும் வளர்ப்பாள். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொல்லி அவர்களை கண்டித்து வளர்ப்பார்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு ஆவிக்குரிய தகப்பனாக இருக்கிறார். பால்கொடுக்கிற தாயைப்போல அவர் தெசலோனிக்கேயரிடத்தில் பட்சமாய் நடந்து கொள்கிறார். அவர்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார். அதே வேளையில் புத்தி சொல்லுகிற தகப்பனைப்போல, அவர் தெசலோனிக்கேயரை எச்சரிக்கவும் செய்கிறார். பவுல் ஆவிக்குரிய தகப்பனாகயிருந்தாலும், தன்னுடைய அதிகாரத்தை அவர்கள் மீது காண்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர் தகப்பனைப் போல, தெசலோனிக்கேயரிடத்தில் அன்போடும், கரிசனையோடும் புத்தி சொல்லுகிறார். அவர்கள் பாதை தவறிப்போகும்போது அதே அன்போடு அவர்களை எச்சரிக்கிறார் (1தெச 2:11,12).

தேவன் நம்மை தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் அழைத்திருக்கிறார். நம்மை அழைத்த தேவனுக்கு நாம் பாத்திரராய் நடக்கவேண்டும். தேவன் நம்மை அழைப்பது நமக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். தம்முடைய ராஜ்யத்திலும் மகிமையிலும் பங்கு பெறுமாறு அவர் நம்மை அழைத்திருக்கிறார். இந்த அழைப்பு சுவிசேஷத்தின் மூலமாய், தேவனிடமிருந்து நமக்கு வந்திருக்கிறது. இதே சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு கடமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மை அழைத்த தேவனுக்கு நாம் பாத்திரராய் நடக்கவேண்டும். இது நம்முடைய ஆவிக்குரிய கடமை.

தேவவசனம்
1தெச 2 : 13-16

1தெச 2:13. ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.

1தெச 2:14. எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்.

1தெச 2:15. அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக் கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து,

1தெச 2:16. புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.

தெசலோனிக்கேயர் மத்தியில் பவுலின் ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. அவர்கள் தேவவசனத்தை பவுல் மூலமாய்க் கேள்விப்பட்டு அதை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் பவுல் மூலமாய் கேள்விப்பட்ட வசனத்தை, மனுஷர் வசனமாய் ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாக ஏற்றுக்கொள்கிறார்கள் (1தெச 2:13). சுவிசேஷத்தின் சத்தியத்தைக் கர்த்தர் மனுஷர் மூலமாகவே அறிவிக்கிறார். சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களும் மற்ற ஜனங்களைப் போலவே சாதாரண ஜனங்களாகவே இருக்கிறார்கள். ஜனங்களிடத்தில்பொதுவாக காணப்படுகிற குறைபாடுகள் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களிடத்திலும் காணப்படுகிறது.

சுவிசேஷத்தின் வார்த்தைகளை மனுஷர் அறிவித்தாலும், அது மனுஷவசனமல்ல. அது தேவனுடைய வசனம். தேவனுடைய வசனம் சத்தியமானது. அப்போஸ்தலர் பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் தேவவசனத்தை அவர்களுக்கு அறிவிக்கிறார். அந்த வசனத்தை ஏற்றுக்கொள்கிறவர்கள் அதை பவுலின் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தேவவசனத்தை தேவவசனமாகத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனுஷருடைய வசனம் அழிந்துபோகக்கூடியது. மனுஷன் அழிந்துபோவது போல அவனுடைய வார்த்தைகளும் அழிந்துபோகும். பல சமயங்களில் மனுஷனுடைய வார்த்தைகள் தப்பிதமாகவும் மதியீனமாகவும் இருக்கும். ஆனால் தேவனுடைய வசனமோ பரிசுத்தமானது, ஞானமானது, நீதியானது, உண்மையுள்ளது, நித்தியகாலமாய் நிலைத்து நிற்கக்கூடியது.

தேவவசனத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் போது, அது நமக்குள் நற்கிரியைகளைச் செய்யும். தேவவசனத்தைவிசுவாசிக்கிற நமக்குள்ளே அது பெலனும் செய்கிறது (1தெச 2:13). தேவவசனம் தேவனிடமிருந்துதான் வந்திருக்கிறது என்பதற்கு அது நமக்குள்ளே பெலன் செய்வது ஓர் ஆதாரமாகயிருக்கிறது. வேதவாக்கியமெல்லாம் சத்தியம். விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரம்தான் தேவவசனம் பெலன் செய்கிறது. தேவவசனத்தை விசுவாசியாமல், அதற்கு அந்நியராயிருக்கிறவர்களுக்குள்ளே, தேவ வசனம் பெலன் செய்வதில்லை.

தெசலோனிக்கேயர் மத்தியில் அப்போஸ்தலர் பவுல் நிறைவேற்றுகிற ஊழியம்மிகுந்த ஆசீர்வாதமாகயிருக்கிறது. இதனால் பவுலும் அவருடைய உடன் ஊழியரும் தேவனுக்கு இடைவிடாமல் ஸ்தோத்திரம் செலுத்துகிறார்கள். தேவன் நமக்குச் செய்கிற நன்மைகளுக்கு, நாம் எவ்வளவு ஸ்தோத்திரம் செலுத்தினாலும் அது போதுமானதாகயிராது. அவர் நம்மை ஆசீர்வதிக்கிறவர். தம்முடைய ஊழியத்தை ஆசீர்வதிக்கிறவர். தம்முடைய வசனங்களை ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கிறவர்களுக்குள்ளே பெலன் செய்கிறவர்.

தேவவசனத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கிறவர்கள் பாடுகளை சகித்துக் கொள்கிறார்கள். உபத்திரவத்தின் மத்தியிலும் நீடிய பொறுமையோடிருக்கிறார்கள். தெசலோனிகேயர், யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை பின்பற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். அந்த சபையார் யூதராலே அதிகமாய்ப் பாடுபட்டார்கள். அப்படியே தெசலோனிக்கேயரும் தங்கள் சுயஜனங்களால் பாடுபடுகிறார்கள் (1தெச 2:14).

சிலுவை கிறிஸ்துவின் அடையாளம். சுவிசேஷத்தினிமித்தமாய் நாம் பாடுகளை அனுபவிக்கும்போது நமக்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டு. தேவன் தாமே கிறிஸ்துவினிமித்தமாய் வரும் பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்வதற்கு நமக்குப் பெலன் தருகிறார்.

யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகள் பாடுகளை அனுபவிக்கிறது. யூதேயா தேசத்திலுள்ளவர்கள்தான் சுவிசேஷத்தை முதன் முதலாக கேள்விப்பட்டார்கள். அவர்கள்தான் சுவிசேஷத்தினிமித்தமாய் முதன் முதலாக பாடுகளை அனுபவித்தார்கள். யூதர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும், அவருடைய விசுவாசிகளுக்கும், அவருடைய சபைக்கும் சத்துருக்களாகயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறார்கள். யூதேயா தேசத்தில் மாத்திரமல்ல, தெசலோனிக்கேயாவிலும் யூதர்கள் மூலமாய் தேவனுடைய சபைகளுக்கு உபத்திரவமுண்டாயிற்று.

உபத்திரவப்படுத்துகிற யூதர்களின் சுபாவங்களை பவுல் இங்கு விவரிக்கிறார். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்தவர்கள். தங்கள் தீர்க்க தரிசிகளையும் அவர்கள் கொலை செய்தார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களைத் துன்பப்படுத்தினார்கள். அவர்களை வெறுத்தார்கள். அப்போஸ்தலருக்கு என்னென்ன உபத்திரவங்களைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு உபத்திரவங்களையும் அவர்கள் கொடுத்தார்கள்.

யூதர்கள் இயேசுகிறிஸ்துவையே கொலைசெய்தார்கள். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களைத் துன்பப்படுத்துவது ஆச்சரியமல்ல. அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தாதவர்கள். தேவனுக்கு ஏற்காதவர்கள். மனுஷர் யாவருக்கும் அவர்கள் விரோதிகளாயிருக்கிறார்கள். யூதர்கள் தங்கள் மார்க்கத்தில் வெறியோடிருந்து, கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்க மறுக்கிறார்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களை உபத்திரவப்படுத்துகிறார்கள்.

அப்போஸ்தலரை உபத்திரவப்படுத்துகிற ஆவி ஒரு பயங்கரமான ஆவி. புறஜாதியார்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பேசுவதற்கு அப்போஸ்தலர்கள் வாஞ்சையாயிருக்கிறார்கள். ஆனால் யூதர்களோ, அப்போஸ்தலர்கள் புறஜாதியார்களோடே பேசாதபடிக்கு தடைபண்ணுகிறார்கள். புறஜாதியார் இரட்சிக்கப்படக்கூடாது என்பதில் அதிக அக்கறை காண்பிக்கிறார்கள் (1தெச 2:16).

யூதர்கள் புறஜாதியாரின் இரட்சிப்புக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற அப்போஸ்தலர் மீதும் கோபப்படுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யாரும் கேட்கக் கூடாது என்பதுதான் யூதர்களுடைய விருப்பம். இவ்விதமாய் யூதர்கள் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள். அவர்கள் மேல் தேவகோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது. தேவனுடைய கோபாக்கினை யூதர்கள்மீது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய தீர்மானம் நிச்சயமாய் நிறைவேறும்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை எழுதிய ஒரு சில வருஷங்களுக்குப் பின்பு, தேவனுடைய கோபாக்கினை யூதர்கள்மீது வந்தது. எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது. ரோமப்பேரரசு யூததேசத்தை அழித்துப் போட்டார்கள். யூதர்களைச் சங்காரம் பண்ணினார்கள். உயிர்தப்பின யூதர்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

வரமனதாயிருந்தேன்
1தெச 2 : 17-20

1தெச 2:17. சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களை விட்டுப் பிரிந்திருந்த படியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம்.

1தெச 2:18. ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்.

1தெச 2:19. எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்;

1தெச 2:20. நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கே சபையாரை பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். அவர்களிடத்தில் வருவதற்கு இரண்டொருதரம் மனதாயிருந்தார். ஆனால் சாத்தானோ அவருக்கு தடைபண்ணிவிட்டான். பவுல் தெசலோனிக்கேயரை விட்டு கொஞ்சகாலம் பிரிந்திருக்கிறார். சரீரத்தின்படி அவர் பிரிந்திருந்தாலும், இருதயத்தின்படி அவர் அவர்களோடிருக்கிறார். அவர்களுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினார். ஆனாலும் அவரால் அங்கு வரமுடியவில்லை. இதனால் பவுலுக்கு மிகுந்த மனவருத்த முண்டாயிற்று. தான் அவர்களைப் பார்க்க வராமலிருப்பதினிமித்தம் தன்னுடைய வருத்தத்தை பவுல் அவர்களுக்கு இந்த நிருபத்தின் மூலமாக தெரிவிக்கிறார். பெரேயாவுக்குப் போகவேண்டுமென்பது பவுலின் விருப்பமல்ல. ஆனாலும் அவருடைய மனவிருப்பத்திற்கு எதிராக, பவுல் பெரேயாவுக்கு இரவு வேளையிலே அனுப்பப்பட்டார்.

பவுல் சரீரத்தின்படி கொஞ்சகாலம் மாத்திரமே தெசலோனிக்கேயரை விட்டுப் பிரிந்திருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சம் நித்திய வாசஸ்தலமல்ல. நாம் இங்கு நித்தியமாக வாசம்பண்ணப் போவதில்லை. இங்கு விசுவாசிகள் நித்தியகாலமாக தங்கியிருந்து ஐக்கியமாகயிருக்கப் போவதுமில்லை. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். பரிசுத்த ஆத்துமாக்கள் பரலோகத்தில் நித்திய காலமாய் வாசம் பண்ணுவார்கள். விசுவாசிகளெல்லோரும் பரலோகத்தில் சந்தோஷமாய் ஐக்கியமாயிருப்பார்கள். பவுல் இதை நினைத்துத்தான், தன் சரீரத்தின்படி, கொஞ்சகாலம் அவர்களை விட்டுப் பிரிந்திருப்பதாகச் சொல்லுகிறார் (1தெச 2:17).

அப்போஸ்தலர் பவுலுக்கு தெசலோனிக்கேயருடைய முகத்தை மறுபடியும் பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையுண்டாயிற்று. அதற்காக அதிகமாய்ப் பிரயத்தனம்பண்ணினார். தன்னுடைய காலத்திற்கும் நேரத்திற்கும் பவுல் எஜமானல்ல. பவுல் தன்னைப் பூரணமாய் இயேசுகிறிஸ்துவுக்கு அர்ப்பணித்திருக்கிறார். பவுலுக்கு தனிப்பட்ட முறையில் சில ஆசைகள் இருந்தாலும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே தன்னுடைய சித்தமாகத் தீர்மானித்திருக்கிறார். அதனால் தெசலோனிக்கேயரைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டான போதிலும், ஊழியத்தினிமித்தமாய் அவரால் அங்கு போகமுடியாமல் போயிற்று.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய தாலந்துகளையும், நேரங்களையும் கர்த்தரிடம் அர்ப்பணிக்க வேண்டும். இவற்றிற்கு ஊழியக்காரர்கள் எஜமான்களாக இருக்கக் கூடாது. நம்முடைய நேரத்திற்கு கர்த்தரே எஜமானாக இருக்க வேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், நம்முடைய நேரங்களைச் செலவுபண்ண வேண்டும்.

தெசலோனிக்கேயரின் முகத்தை மறுபடியும் பார்க்கவேண்டும் என்னும் ஆசையில், பவுல் அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினார். அவரால் அது மாத்திரமே செய்ய முடியும். ஆனால் சாத்தானோ பவுலுக்கு விரோதமாக கிரியை செய்கிறான். பவுலுக்கு விரோதமாக மாத்திரமல்ல, கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோருக்கும் விரோதமாக அவன் கிரியை செய்கிறான். தெசலோனிக்கேயரிடத்தில் வர பவுல் இரண்டொருதரம் மனதாயிருந்தார். ஆனால் சாத்தானோ பவுலை அங்கு போகாதவாறு தடைபண்ணிவிட்டான் (1தெச 2:18).

தேவனுடைய ஊழியத்திற்கு சாத்தான் நித்திய சத்துருவாகயிருக்கிறான். ஊழியத்தை தடைசெய்வதற்கு அவன் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறான். சாத்தான் தன்னுடைய முயற்சியில் ஒருபோதும் சோர்ந்துபோவதில்லை. சாத்தான் எவனை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைகிறான்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரை பார்க்க முடியாமல் போனாலும், தன்னுடைய அன்பை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். தான் அவர்கள்மீது பிரியமாகவும், பாசமாகவும் இருப்பதை அவர்களுக்கு உறுதிபண்ணுகிறார்.

தெசலோனிக்கேயர் பவுலுக்கும் அவருடைய உடன்ஊழியருக்கும் நம்பிக்கையாயிருக்கிறார்கள். அவர்களே ஊழியக்காரருக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியும் கிரீடமுமாயிருக்கிறார்கள். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விதைத்திருக்கிறார். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள். பவுல் இப்போது சந்தோஷத்தோடே ஆத்துமாக்களை அறுவடை செய்கிறார். அவர்கள் பவுலுக்கு மகிமையும் சந்தோஷமுமாக இருக்கிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார். அவர் வரும்போது அவருடைய சந்நிதானத்தில் நமக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியும் கிரீடமும் உண்டாகவேண்டும். நம்முடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளே, கிறிஸ்து வரும்போது, அவருடைய சந்நிதானத்திலே, நமக்கு நம்பிக்கையும் சந்தோஷமுமாயிருப்பார்கள். அவர்களே நமக்கு மகிழ்ச்சியும் கிரீடமுமாயிருப்பார்கள். ஒருவேளை பவுலும் அவருடைய உடன் ஊழியரும் தெசலோனிக்கேய சபைக்கு வரமுடியாமல் போகலாம். ஊழியக்காரர்கள் வந்தாலும், வரமுடியாமல் போனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மத்தியிலே மறுபடியும் நிச்சயமாய் வருவார்.

3 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர்மீது தனக்குள்ள அன்பை மறுபடியும் தெளிவுபடுத்துகிறார் (1தெச 3:1-5). பவுல் அவர்களிடத்தில் தீமோத்தேயுவை அனுப்பினார். தீமோத்தேயு அவர்களிடமிருந்து பவுலுக்கு நற்செய்தியை கொண்டுவந்திருக்கிறார் (1தெச 3:6-10). பவுல் தெசலோனிக்கேயருக்காக ஜெபிக்கிறார் (1தெச 3:11-13).

தீமோத்தேயுவை அனுப்பினோம் 1தெச 3 : 1-5

1தெச 3:1. ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து,

1தெச 3:2. இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைபற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன் வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம்.

1தெச 3:3. இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.

1தெச 3:4. நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்த போது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 3:5. ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்.

அப்போஸ்தலர் பவுல் அத்தேனே பட்டணத்தில் தனித்து விடப்பட்டிருக்கிறார். இதுவும் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாயிருக்கும் என்று பவுல் தீர்மானிக்கிறார். தான் இங்கு தனித்து விடப்படுகிறது நன்மையாயிருக்கும் என்று பவுல் நினைக்கிறார். தெசலோனிக்கேயரின் சுகசெய்தியை அறிந்து வருவதற்காக பவுல் அவர்களிடத்தில் தீமோத்தேயுவை அனுப்புகிறார். பவுல் தீமோத்தேயுவை அனுப்பும்போது நற்குணங்களை அவருடைய சாட்சியாக அறிவிக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் பொதுவாக தீமோத்தேயுவைப்பற்றிச் சொல்லும்போது, அவரை தன்னுடைய "உத்தம குமாரன்" என்று சொல்லுவது வழக்கம். ஆனால் இங்கோ பவுல் தீமோத்தேயுவை "நம்முடைய சகோதரன்" என்று சொல்லுகிறார். சகோதரன் என்று சொல்லுவதோடு, அவரை "தேவஊழியக்காரன்" என்றும், "கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாள்" என்றும் சொல்லுகிறார்.

ஊழியக்காரர்கள் ஒருவருக்கொருவர் மற்ற ஊழியக்காரர்களுடைய கரங்களைப் பெலப்படுத்தவேண்டும். மற்ற ஊழியக்காரர்மீது பொறாமைப்படக்கூடாது. எரிச்சலடையக்கூடாது. மற்ற ஊழியக்காரரின் ஊழியத்திற்கு தடைபண்ணக்கூடாது. எல்லா ஊழியக்காரரும் கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில், உடன்வேலையாட்களாக இருக்கிறார்கள். எல்லோரும் இணைந்து கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும். ஒருவருக்கொருவர் பிரிந்து, ஒருவருக்கு விரோதமாக ஒருவர் கிரியை நடப்பிக்கக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவைத் தன்னுடைய உடன்வேலையாள் என்று சொல்லி, அவருடைய ஊழியத்தை உற்சாகப்படுத்துகிறார்.

பவுல் தீமோத்தேயுவை தெசலோனிக்கேயரிடத்தில் அனுப்புவதற்கு ஒரு நோக்கமுள்ளது. தீமோத்தேயு அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றி அவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும். தெசலோனிக்கேயர் கிறிஸ்துவின் நிமித்தமாய் சில பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். இந்த உபத்திரவங்களினால் தெசலோனிக்கேயர் யாரும் அசைக்கப்பட்டு விடக்கூடாது. அவர்களை திடப்படுத்த வேண்டும். இதற்காகவே அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவை அவர்கள் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். தீமோத்தேயு தெசலோனிக்கேயருக்கு ஆறுதலாகயிருப்பார். அவர்களைத் திடப்படுத்துவார். அவர்களுக்குப் புத்திசொல்லுவார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு எவ்வளவு ஆறுதல் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு நாம் திடமாயிருப்போம்.

தெலோனிக்கேயர் தங்கள் விசுவாசத்தில் திடப்படவேண்டும். தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் ஆறுதல் பெறவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். அந்த விசுவாசத்தில் அவர்கள் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்தோடு கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். அவர்களுக்குப் பாடுகளும், உபத்திரவங்களும் வந்தாலும் சோர்ந்துபோய் விடக்கூடாது. உபத்திரவங்களினிமித்தமாய் கர்த்தரைப் பின்பற்றுவதிலிருந்து பின்வாங்கிப் போய்விடக்கூடாது. வழியைவிட்டு விலகிச் சென்றுவிடக்கூடாது.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார். அவருடைய ஆத்துமாக்களைக்குறித்து அதிக கரிசனையோடிருக்கிறார். அவர்களுக்கு ஆவிக்குரிய உதவிசெய்வதற்காக, தன்னுடைய நம்பிக்கைக்குரிய தீமோத்தேயுவை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறார்.

எல்லா விசுவாசிகளுக்கும் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வரலாம். உபத்திரவங்கள் வரும்போது அவற்றை இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சகித்துக்கொள்ள வேண்டும். உபத்திரவங்களைக் கடந்து வருவதற்கு ஆவியானவரிடமிருந்து பெலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவினிமித்தமாய் நமக்கு உபத்திரவங்கள் உண்டு. இந்த உபத்திரவங்களை சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் (1தெச 3:3).

விசுவாசிகளுக்கு உபத்திரவம் வருமென்று அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் இருந்தபோது ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். அவர் முன்னறிவித்த பிரகாரம், அவர்களுக்கு இப்போது உபத்திரவம் வந்திருக்கிறது. உபத்திரவம் சுவிசேஷத்தின் மூலமாய் உண்டாயிற்று. சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறவர்கள் உபத்திரவத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். எல்லா இடங்களிலும் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு உபத்திரவம் வருவதுபோல, தெசலோனிக்கேயருக்கும் இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாய் உபத்திரவமுண்டாயிற்று.

தெசலோனிக்கேயர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் குழந்தைகளைப்போல இருக்கிறார்கள். பவுல் அவர்களுக்கு ஒரு தாயைப்போலவும், ஒரு தகப்பனைப்போலவும் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறார். அவர்கள் இப்போது தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்று வருகிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் அவர்களுக்கு உபத்திரவம் வந்திருக்கிறது. சோதனைக்காரன் அவர்களை சோதனைக்குட்படுத்துகிறான். இந்த சோதனையில் தெசலோனிக்கேயர் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்களா என்பதை அறிந்துகொள்ள பவுல் ஆர்வமாயிருக்கிறார். அதை அறிந்து வருவதற்காக தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்புகிறார் (1தெச 3:5).

தெசலோனிக்கேயரின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு சோதனைக்காரன் மூலமாய் அதிக சோதனை வந்துவிட்டதோ என்று பவுல் பயப்படுகிறார். பவுலால் பொறுத்திருக்க முடியவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் இப்போது திடமாயிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள ஆவலாயிருக்கிறார். சோதனைக்காரன் தயவு தாட்சணியம் பாராமல் எல்லா விசுவாசிகளையும் சோதனைக்குட்படுத்துவான். சோதிப்பதில் அவன் ஒருபோதும் சோர்ந்துபோவதில்லை. பல சமயங்களில் பிசாசு விசுவாசிகளைச் சோதித்து, வெற்றியும் பெற்றிருக்கிறான். இப்போது தெசலோனிக்கேயரைச் சோதித்து, அவர்களை பலவீனப்படுத்த வேண்மென்று சாத்தான் தீவிரமாய் முயற்சி செய்கிறான்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் சுவிசேஷத்தை விதைத்திருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை அவர்களுக்குச் செய்திருக்கிறார். சாத்தானுடைய சோதனையினால், தங்களுடைய வேலை வீணாய்ப்போயிற்றோ என்று பவுல் பயப்படுகிறார். அவர்கள் என்ன ஆனார்களோ என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறார். இனிமேலும் பவுலால் பொறுத்திருக்க முடியவில்லை.

பவுல் தெசலோனிக்கேயர் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்ததின் மூலமாய் அங்கு சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இப்போது ஆவியின் கனியை வெளிப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் கனிகொடுக்கக்கூடாதபடிக்கு சாத்தான் அவர்களை உபத்திரவப்படுத்துகிறான். சாத்தான் விசுவாசிகளையும் சோதிப்பான். ஊழியக்காரர்களையும் சோதிப்பான்.

பல சமயங்களில் சாத்தானால் ஊழியக்காரர்களை ஜெயிக்க முடியாது. கர்த்தருக்காக அவர்கள் செய்கிற ஊழியத்தை சாத்தானால் தடைபண்ண முடியாது. ஆனாலும் சாத்தான் சோர்ந்துபோகமாட்டான். ஊழியத்தை தடைபண்ண முடியாமல் போனாலும், அவர்களுடைய ஊழியத்தில் ஜெயம்கிடைக்காதபடி செய்வதற்கு முயற்சி செய்வான். ஊழியம் வளராதபடி தடைபண்ணுவதற்கு சாத்தான் பிரச்சனைகளைக்கொடுப்பான். சாத்தான் தன்னால் முடிந்த எல்லா உபாயங்களையும், எல்லா தந்திரங்களையும் விசுவாசிகளுக்கு விரோதமாகவும், ஊழியக்காரர்களுக்கு விரோதமாகவும் பயன்படுத்துகிறான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவை தெசலோனிக்கேயர் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். தெசலோனிக்கேயருக்கு உபத்திரவம் வருமென்று, பவுல் அவர்களிடத்திலிருந்த போது, அவர்களுக்கு முன்னறிவித்தார். அவர் முன்னறிவித்தபடியே அவர்களுக்கு உபத்திரவம் வந்து நேரிட்டது. இந்த உபத்திரவங்களினாலே தெசலோனிக்கேயரில் ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு, அவர்களைத் திடப்படுத்துவதற்காக, பவுல் தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்பியிருக்கிறார். தீமோத்தேயு அவர்களிடத்தில் வந்து, அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றி அவர்களுக்குப் புத்திசொல்லுவார்.

எல்லா உபத்திரவங்களும் சத்துருவின் மூலமாக வரும் என்று சொல்ல முடியாது. நம்முடைய எல்லா பாடுகளுக்கும், வேதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் சாத்தானே காரணமென்று அவன்மீது மொத்தமாக குறை சொல்லமுடியாது. சில சமயங்களில் தேவனுடைய தீர்மானத்தின் பிரகாரமாகவும், அவருடைய அனுமதியோடும், விசுவாசிகளுக்கு உபத்திரவம் வரும்.

தெசலோனிக்கேயருக்கு உபத்திரவம் வருமென்று பவுல் முன்னறிவித்தார். அது எச்சரிப்பின் சத்தம். நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை ஏற்கெனவே தரித்துக்கொண்டு, சாத்தானோடு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கவேண்டும். என்பதற்காகவே, நமக்கு முன்னறிவிப்பு கொடுக்கப்படுகிறது. முன்னறிவிப்பு நமக்குக் கொடுக்கப்படும்போது, நாம் முன்னெச்சரிக்கையோடு இருக்க முடியும்.

விசுவாசிகளுடைய வாழ்க்கையில் உபத்திரவம் வரும்போது, நம்முடைய விசுவாசம் உறுதிப்படும். சோதனையை மேற்கொள்வதற்கு கர்த்தர் நமக்குப் பெலன் கொடுப்பார். கர்த்தருடைய பெலனைப் பெற்றுக்கொள்ள நமக்குப் பயிற்சி கிடைக்கும். நமக்கு உபத்திரவம் வருமென்று முன்னறிவிக்கப்படும்போது, நம்முடைய ஜெபநேரத்தை அதிகரிக்கவேண்டும். உபத்திரவத்தைச் சகிப்பதற்கு நாம் ஆயத்தமாகவேண்டும். தெசலோனிக்கேயருக்கு ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்ட பிரகாரமே உபத்திரவம் வந்தது. எதிர்பாராதவிதமாக உபத்திரவம் வந்து அவர்களில் யாரையும் வாரிக்கொள்ளவில்லை.

ஆனாலும் நமக்கு உபத்திரவம் வரும்போது, நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்தை விட்டு விலகிப்போய்விட்டோமென்றால், நம்மிடத்தில் செய்யப்பட்ட ஊழியம் வீணாய்ப்போகும். விசுவாசத்திலிருந்து விசுவாசிகள் விழுந்துவிட்டால் அது ஊழியக்காரர்களுக்குத் தோல்விதான். அவர்களுடைய ஊழியம் வீணாய்ப்போயிற்று என்பதற்கு விசுவாசிகளின் தோல்வி ஓர் அடையாளம். ஆகையினால் சோதனைக்காரர் விசுவாசிகளைச் சோதனைக்குட்படுத்தும் போது, ஊழியக்காரர்கள் விசுவாசிகளின் விசுவாசத்தை அறிந்துகொள்ளவேண்டும். அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றி அவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும். உபத்திரவங்களினாலே அவர்கள் அசைக்கப்படாதபடிக்கு அவர்களைத் திடப்படுத்தவேண்டும்.

தீமோத்தேயு நற்செய்தி சொன்னான் 1தெச 3 : 6-10

1தெச 3:6. இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும், அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது போல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்களென்பதைக் குறித்தும், எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே,

1தெச 3:7. சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்.

1தெச 3:8. நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.

1தெச 3:9. மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காக, நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம்?

1தெச 3:10. உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோமே.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரின் விசுவாசத்தை அறிந்து வருவதற்காக தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்பினார். தீமோத்தேயு தெசலோனிக்கேயரைப் போய்பார்த்து, அவர்களுடைய விசுவாசத்தை அறிந்து, மறுபடியும் பவுலிடத்தில் திரும்பி வந்து, அவரிடத்தில் தெசலோனிக்கேயரைப் பற்றிய நற்செய்தியைச் சொல்லுகிறார். இதனால் பவுலுக்கு மிகுந்த ஆறுதல் உண்டாயிற்று.

தீமோத்தேயு பவுலிடத்தில் தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைப் பற்றிய நற்செய்தியைச் சொல்லுகிறார். அவர்கள் உபத்திரவத்தினிமித்தமாய் சோர்ந்து போய்விடவில்லை. விசுவாசத்தைவிட்டுவிட்டு பின்வாங்கிப் போய்விடவில்லை. அவர்கள் விசுவாசத்தில் திடமாய் நிலைத்திருக்கிறார்கள். அவர்கள் அன்பும் நிலைத்திருக்கிறது. சுவிசேஷத்தின்மீதும், தங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த ஊழியக்காரர்மீதும் அவர்கள் கொண்டிருந்த அன்பு சிறிதும் குறையவில்லை. இன்னும் அன்பாகவே இருக்கிறார்கள்.

தெசலோனிக்கேயர் பவுலையும், அவருடைய உடன்ஊழியரையும் காண வாஞ்சையாயிருக்கிறார்கள். அப்போஸ்தலரும் அவர்களைக் காண வாஞ்சையாயிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பதினால் ஊழியக்காரரும் விசுவாசிகளும் ஒன்றுபோலவே சிந்திக்கிறார்கள். இவர்கள் சீக்கிரத்தில் சந்திப்பதற்கு வாய்ப்பு உண்டாகவில்லை. ஆனாலும் அவர்களுடைய அன்பும் குறைந்துபோகவில்லை. அவர்கள் சரீரத்திலே தூரமாயிருந்தாலும், தங்கள் ஆவியிலே சமீபத்திலிருக்கிறார்கள்.

அப்போஸ்தலருக்கு இக்கட்டுக்களும் உபத்திரவங்களும் நேரிட்டது. இவற்றின் மத்தியில் அவர்களுக்கு தெசலோனிக்கேயரைப்பற்றிய நற்செய்தி வருகிறது. அவர்களுடைய விசுவாசத்தினாலே பவுல் அவர்களைக் குறித்து மிகுந்த ஆறுதலடைகிறார். ஒருபுறம் தனக்கு உபத்திரவம் வந்தாலும், மற்றொரு புறம் தெசலோனிக்கேயர் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்னும் நற்செய்தி, உபத்திரவத்தினால் வருகிற வேதனைகளையெல்லாம் நீக்கிப்போடுகிறது. அந்த நற்செய்தி பவுலுக்கு ஆறுதலைத் தருகிறது. உபத்திரவத்தினிமித்தமாய் அப்போஸ்தலர்கள் சரீரத்தில் சோர்ந்து போயிருந்தாலும், தெசலோனிக்கேயரைப் பற்றிய நற்செய்தி அவர்களுடைய ஆவியை உற்சாகப்படுத்துகிறது. அவர்கள் புதிய ஜீவனையும், புதிய பெலனையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

தெசலோனிக்கேயர் தங்கள் விசுவாசத்திலும், அன்பிலும் நிலைத்திருக்கிறார்கள் என்னும் நற்செய்தியைக் கேட்டு பவுலும் அவருடைய உடன்ஊழியரும் ஆறுதலடைகிறார்கள். சந்தோஷப் படுகிறார்கள். விசுவாசிகள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால், தாங்கள் பிழைத்திருப்பதாக அப்போஸ்தலர் சொல்லுகிறார் (1தெச 3:8). விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் தடுமாறக்கூடாது. விசுவாசத்தைவிட்டு விலகிப் போய்விடக்கூடாது. அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவில்லை என்றால், ஊழியக்காரருக்கு மரண வேதனை உண்டாகும். விசுவாசிகள் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதை ஊழியக்காரர் பார்க்கும்போது, அவர்களுக்கு மிகுந்த ஆறுதலும், மிகுந்த சந்தோஷமும், மிகுந்த உற்சாகமும் உண்டாகும். இதைப்பார்த்து ஊழியக்காரர் பிழைத்திருப்பார்கள் என்று பவுல் சொல்லுகிறார்.

தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைக் கேள்விப்பட்டு பவுல் கர்த்தரைத் துதிக்கிறார். அவர்கள் நிமித்தமாய் பவுல் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்களைக் குறித்து அப்போஸ்தலர் மிகுந்த சந்தோஷமடைந்திருக்கிறார்கள். இந்த சந்தோஷத்திற்காக, தாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம் என்று பவுல் யோசிக்கிறார் (1தெச 3:9). நம்முடைய சந்தோஷம் அதிகரிக்கும்போது நாம் கர்த்தருக்கு அதிகமாய் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். ஆனால் பவுலுக்கோ எவ்வளவு ஸ்தோத்திரம் என்று புரியவில்லை. அந்த அளவுக்கு அவர் மிகுந்த சந்தோஷத்திலிருக்கிறார். தெசலோனிக்கேயர் நிமித்தமாய் மிகுந்த ஆறுதலும், சந்தோஷமும் அடைந்திருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்த தன்னுடைய வார்த்தைகள் போதாது என்று பவுல் தன்னையே தாழ்த்துகிறார்.

பவுலின் இருதயம் தெசலோனிக்கேயர் மீதுள்ள அன்பினால் நிரம்பியிருக்கிறது. அதே இருதயம் அவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிற துதியினாலும் நிரம்பியிருக்கிறது. பவுல் அவர்களுக்காக இரவும் பகலும் வேண்டிக்கொள்கிறார் (1தெச 3:10). பவுல் பகல்வேளையில் கூடாரம்பின்னுகிற தொழிலைச் செய்கிறவர். இரவு வேளையில்கூட பவுல் இந்த வேலையைச் செய்வார். மீதமுள்ள நேரங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் பவுல் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார். மீதி ஏதாவது கொஞ்சம் நேரம் கிடைத்தால் அதில்தான் நித்திரை செய்வார். இவ்வளவுக்கும் மத்தியில் பவுல் தெசலோனிக்கேயருக்காக இரவும் பகலும் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார். தேவன் அவர்களுடைய முகத்தைக் கண்டு, அவர்களுடைய விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கவேண்டும் என்பதே பவுலின் ஜெபவிண்ணப்பம்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில் வந்து ஸ்தோத்திரம் செலுத்தும்போது, அவருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணவும் வேண்டும். நம்மை ஜெபத்திற்கு அர்ப்பணிக்கவேண்டும். நம்மிடத்தில் பல குறைவுகள் இருக்கலாம். இந்தக் குறைவுகளை நம்முடைய சுயபலத்தால் நிறைவாக்க முடியாது. கர்த்தரே குறைவுகளை நிறைவாக்குகிறவர். தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைக் கேட்டு பவுல் ஆறுதலடைந்திருக்கிறார். அவர்கள் விசுவாசத்திலும் அன்பிலும் திடமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய விசுவாசத்தில் குறைவுகள் இருக்கலாம் என்று நினைத்து, அந்தக் குறைவுகளை கர்த்தர் தாமே நிறைவாக்கவேண்டுமென்று, பவுல் தேவனுடைய சமுகத்தில் இரவும் பகலும் வேண்டிக்கொள்கிறார்.

தெசலோனிக்கேயர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிபூரண வளர்ச்சி பெறவேண்டும். அவர்களுடைய முகம் கிறிஸ்துவின் சாயலைப் பூரணமாய்ப் பெற்று பிரகாசமாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் காணப்படுகிற விசுவாசக் குறைவுகளெல்லாம் நீங்கி, அவர்கள் நிறைவான விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நற்குணமுள்ளவர்களாக இருக்கலாம். நன்றாக ஊழியம் செய்யலாம். என்றாலும் நம்முடைய விசுவாசத்தில் குறைவு இருப்பதற்கு வாய்ப்புள்ளது. நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, நம்முடைய விசுவாசத்தின் குறைவுகளை தேவன் தாமே நிறைவாக்கவேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். நம்முடைய விசுவாசம் தெளிவாகவும், உறுதியாகவும் நிலைத்திருக்கவேண்டுமென்று நாம் தேவனிடத்தில் கருத்தாய் வேண்டிக்கொள்ளவேண்டும்.

இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக 1தெச 3 : 11-13

1தெச 3:11. நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக.

1தெச 3:12. நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து,

1தெச 3:13. இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும் படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

தெசலோனிக்கேயருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாகவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்கள் ஆசீர்வாதம் பெறுவதற்கு ஒரே வழி, கர்த்தருடைய சமுகத்தில் அவர்களுக்காக ஜெபம்பண்ணுவதுதான். பவுல் அவர்களுக்குச் சொல்லவேண்டிய ஆலோசனைகளையெல்லாம் இந்த நிருபத்தில் எழுதி, அவர்களுக்கு அனுப்பி, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணுகிறார்.

அப்போஸ்தலர் பவுல் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்" ஜெபிக்கிறார். நம்முடைய ஜெபங்களெல்லாமே இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால்தான் ஏறெடுக்கப்பட வேண்டும். அவர் நம்முடைய கர்த்தராகவும், இரட்சகராகவும் இருக்கிறார். அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஜெபம் பண்ணும்போது, கர்த்தர் தாமே தங்களை தெசலோனிக்கேயரிடத்திற்கு நேராக வழிநடத்துவாராக, என்று சொல்லி ஜெபிக்கிறார்.

தெசலோனிக்கே தேசத்திற்குப் பிரயாணம்பண்ண கர்த்தர் தனக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். பவுல் இவ்வாறு ஜெபிப்பதினால், தன்னுடைய சொந்த சித்தத்தையும், சொந்த விருப்பத்தையும், அவர் தேவனிடத்தில் சொல்லுவதுபோல உள்ளது. அவர் தன்னுடைய சொந்த பலத்தில் சார்ந்திருப்பதுபோல தெரிகிறது.

ஆனால் பவுலோ பிதாவாகிய தேவனையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவருடைய கிருபையையும், அவருடைய வல்லமையையும் நன்றாய் அறிந்திருக்கிறவர். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய வழிநடத்துதல் தேவை. நம்முடைய ஒவ்வொரு நடையையும் தேவனே வழிநடத்தவேண்டுமென்று அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். நாம் எங்கு போகவேண்டும் என்பதும், நாம் என்ன செய்யவேண்டும் என்பதும் தேவனுக்குத் தெரியும். தேவன் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, நம்மை வழிநடத்த வேண்டுமென்று, நாம் அவருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். நம்முடைய வழிகள் எல்லாவற்றிலும் நாம் கர்த்தரை நினைவுகூரவேண்டும். நம்மை கர்த்தரே வழிநடத்தவேண்டுமென்று, விண்ணப்பம்பண்ணி, அவரையே சார்ந்திருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரின் ஆசீர்வாதத்திற்காக ஜெபம்பண்ணுகிறார். அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும், மற்ற எல்லா மனுஷரிடத்திலும் வைக்கும் அன்பிலும், கர்த்தர் அவர்களை பெருகச்செய்யவேண்டும் என்று ஜெபம்பண்ணுகிறார். மேலும் தேவன் அவர்களை அன்பிலே நிலைத்தோங்கச் செய்யவேண்டும் என்றும் தேவனுடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார் (1தெச 3:12). அப்போஸ்தலர் பவுலும், அவருடைய உடன்ஊழியரும் தெசலோனிக்கேயரிடத்தில் அதிகமாய் அன்பு வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய அன்புக்கு ஒப்பாய், தெசலோனிக்கேயரும் மற்றவரிடத்தில் அன்பு வைத்திருக்கவேண்டும்.

அன்பு தேவனுடையது. அன்பு சுவிசேஷத்தையும், நியாயப் பிரமாணத்தையும் நிறைவேற்றுகிறது. தீமோத்தேயு தெசலோனிக்கேயிலிருந்து பவுலிடத்தில் திரும்பி வந்தபோது, அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றிய நற்செய்தியை பவுலுக்கு அறிவித்தார். ஆனாலும் தெசலோனிக்கேயரிடத்தில் ஒரு குறை காணப்படுகிறது. அவர்கள் அன்புகூருவதில் குறைந்திருக்கிறார்கள். அவர்களுடைய குறைவைப்பற்றி பவுல் கேள்விப்பட்டபோது, கர்த்தர்தாமே அவர்களுடைய அன்பை பெருகவும், நிலைத்தோங்கவும் செய்யவேண்டும் என்று தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

தேவன் நமக்கு ஆசீர்வாதம் கொடுக்கிறார். அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்களை நம்முடைய கரங்களில் பெற்றிருக்கிறோம். நம்முடைய கரத்திலிருப்பது நமக்குப் போதுமானதல்ல. நம்முடைய இருதயம் தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நிரம்பியிருக்க வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் நாம் பெருகவேண்டும். நிலைத்தோங்க வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிற நாம், அந்த ஆசீர்வாதங்கள் நம்மிடத்தில் பெருகவும், நிலைத்தோங்கவும் வேண்டுமென்று அவருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரிடத்தில் அதிகமாய் அன்பு வைத்திருக்கிறார். நாம் எந்த அளவுக்கு விசுவாசிகளிடத்தில் அன்பு வைத்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பற்றி கரிசனையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். விசுவாசிகள் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். தெசலோனிக்கேயர் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக, பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும் படி, அவர்களுடைய இருதயங்களை ஸ்திரப்படுத்த வேண்டுமென்று பவுல் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறார்.

பரலோகத்தில் பிரவேசிக்கிற எல்லோரிடமும் பரிசுத்தம் இருக்கவேண்டும். நாம் பிழையற்றவர்களாகவும் இருக்கவேண்டும். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நாம் நிற்கும்போது நம்முடைய இருதயம் பரிசுத்தத்தினால் நிரம்பியிருக்கவேண்டும். தேவனுக்கு முன்பாக நம்முடைய வழிகள் பிழையற்றதாக இருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட இந்தப் பூமிக்கு மறுபடியும் வருவார். அப்போது நாம் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். அப்போது நாம் தேவனுக்கு முன்பாக பிழையற்றவர்களாகவும், பரிசுத்தமுள்ள வர்களாகவும் நிற்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் நாம் இந்தச் சிலாக்கியங்களைப் பெற்றுக்கொள்ளத் தக்கதாக, கர்த்தர் தாமே நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்த வேண்டுமென்று, அவருடைய சமுகத்தில் ஜெபிக்கவேண்டும்.

4 அதிகாரம்

விசுவாசிகள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1தெச 4:1-8). விசுவாசிகள் சகோதர சிநேகத்தில் இன்னும் அதிகமாய்ப் பெருகவேண்டும் (1தெச 4:9-12). விசுவாசிகள் சிலருடைய சிநேகிதரும், உறவினரும் கர்த்தருக்குள் மரித்துப்போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விசுவாசிகளுடைய மனப்பாங்கு எப்படியிருக்கவேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1தெச 4:13-18).

பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும்
1தெச 4 : 1-8

1தெச 4:1. அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்திசொல்லுகிறோம்.

1தெச 4:2. கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே.

1தெச 4:3. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,

1தெச 4:4. தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல்,

1தெச 4:5. உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:

1தெச 4:6. இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன்சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.

1தெச 4:7. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

1தெச 4:8. ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.

விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் இன்னும் அதிக அதிகமாய்த் தேறவேண்டும். நன்மையான காரியங்கள் எதுவோ அவைகளில் விசுவாசிகள் இன்னும் அதிக அதிகமாய் வளர்ச்சி பெறவேண்டும். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு ஆலோசனை சொல்லும்போது, மிகுந்த அன்போடும், கரிசனையோடும் அவர்களுக்கு எழுதுகிறார். அவர்களை, "சகோதரரே" என்று பிரியமாய் அழைக்கிறார். அப்போஸ்தலர் பவுலுக்கு தெசலோனிக்கே சபையார் ஆவிக்குரிய சகோதரர்களாகயிருக்கிறார்கள். பவுலும் அவர்களை தன்னுடைய சகோதரராக அங்கீகரித்து, அவர்களிடத்தில் அன்புகூருகிறார். அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. சகோதர சிநேகத்தோடு அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். "கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்தி சொல்லுகிறோம்" என்று அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்.

தெசலோனிக்கேயர் தங்கள் பரிசுத்தமான நடத்தையிலே இன்னும் அதிகம் அதிகமாய் தேறவேண்டும். அவர்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் போதகம் செய்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் இன்னின்ன பிரகாரமாய் தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். தெசலோனிக்கேயரும் அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் கேட்டு, அவற்றைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய உபதேசத்தைக் கேட்கிறவர்கள், பரிசுத்தத்திலும், தேவகிருபையிலும் அதிகம் அதிகமாய் தேறவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எவ்வளவுதான் தேர்ச்சியடைந்தாலும், இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் நம்மால் பரிபூரண நிலையை அடையமுடியாது. ஆகையினால் நாம் தேர்ச்சி பெறவேண்டியது இன்னும் ஏராளமாய் உள்ளது. தேவன் நமக்கு நியமித்திருக்கிற இலக்குக்கு நேராய் அநுதினமும் தேர்ச்சி பெறவேண்டும். தொடர்ந்து தேர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியில்லாத மந்தநிலமை காணப்படக்கூடாது (1தெச 4:1).

அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயர் மத்தியில் தங்களுடைய ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் என்னென்ன பிரகாரமாய் நடக்கவேண்டும் என்னும் உபதேசத்தை அவர்கள் அப்போஸ்தலரிடத்திலிருந்து கேட்டு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதுவே சுவிசேஷத்தின் திட்டம். நாம் எதை விசுவாசிக்கவேண்டும் என்பதை சுவிசேஷம் நமக்குப் போதிப்பதோடு, நாம் என்னென்ன பிரகாரமாய் நடக்கவேண்டும் என்றும் சுவிசேஷம் நமக்குப் போதிக்கிறது.

விசுவாசிகள் எப்படி நடக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் போதித்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி பேசவேண்டுமென்று அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் போதிக்கவில்லை. பரிசுத்தமாய் ஜீவிக்காமல், சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தி அழகாய்ப் பேசுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. நம்முடைய பேச்சு நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டுபோகாது. நம்முடைய பரிசுத்தமான ஜீவியமும், பரிசுத்தமான நடத்தையுமே நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துக் கொண்டுபோகும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உபதேசம் செய்கிறார், ஆலோசனை சொல்லுகிறார், வேண்டிக்கொள்கிறார், புத்திசொல்லுகிறார். இதன் மூலமாய் பவுல் தேவனைப் பிரியப்படுத்துகிறார். நாம் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாக இருக்கக்கூடாது. கர்த்தருக்குப் பிரியமான வழி எது என்பதை ஆராய்ந்து பார்த்து, அந்த வழியில் நாம் நடக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தராகிய இயேசுவினாலே தெசலோனிக்கேயருக்குக் கட்டளை கொடுக்கிறார். அவர்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவேண்டும் என்று அவர்களுக்குப் போதகம் செய்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவிடமிருந்து அப்போஸ்தலருக்கு ஆவிக்குரிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய சொந்த கட்டளையை ஜனங்களுக்கு சொல்லுவதில்லை. தேவனுடைய கட்டளையையே அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்குச் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்கள் ஒருபோதும் தங்களுடைய அப்போஸ்தல அதிகாரத்தை தப்பிதமாகப் பயன்படுத்துவதில்லை. தேவனுக்கு எப்படி பிரியமாயிருக்க வேண்டும் என்றே அவர்கள் உபதேசம் செய்தார்கள்.

அப்போஸ்தலர்கள் தங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை, அவர்கள் கர்த்தராகிய இயேசுவினாலே தங்களுக்குக் கொடுத்தார்கள் என்பதை தெசலோனிக்கேயரும் அறிந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயருக்கு உபதேசம் செய்தாலும் அது மனுஷருடைய உபதேசமல்ல. அவர்கள் பேசியது மனுஷருடைய வசனமல்ல. அது தேவனுடைய உபதேசம். அது தேவனுடைய வசனம்.

விசுவாசிகள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். ஆகையினால் நாம் வேசிமார்க்கத்திற்கு விலகியிருக்கவேண்டும். மோசஇச்சைக்கு உட்படக்கூடாது. நம்முடைய சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளவேண்டும். வேசிமார்க்கம் அசுத்தமானது. அப்போஸ்தலர் பவுல் "வேசிமார்க்கத்திற்கு விலகவேண்டும்" என்று சொல்லும்போது, அவர் எல்லா அசுத்தங்களையும் இந்த ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறார். இருதயத்தின் பரிசுத்தத்திற்கு எதெல்லாம் விரோதமாக இருக்குமோ அதெல்லாம் தேவனுக்கும், அவருடைய கட்டளைகளுக்கும் விரோதமாக இருக்கிறது. தேவனுக்கு விரோதமாகயிருப்பது அவருடைய சுவிசேஷத்திற்கும் விரோதமாகயிருக்கும். ஆகையினால் நம்முடைய இருதயத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் பரிசுத்தம் நிரம்பியிருக்கவேண்டும்.

பரிசுத்தத்திற்கும் தேவனுடைய சித்தத்திற்கும் தொடர்புள்ளது. தேவன் பரிசுத்தர். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டும் என்பதே அவருடைய சித்தம். நம்முடைய இருதயத்தில் பரிசுத்தம் இருந்தால் மாத்திரம் போதாது, நம்முடைய சரீரத்திலும் பரிசுத்தம் இருக்கவேண்டும். நம்முடைய சரீர பரிசுத்தம் நமக்கு அதிக மேன்மையைத் தரும். ஆகையினால் அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளின் பரிசுத்தத்தைப் பற்றிச் சொல்லும்போது, இருதயத்தின் பரிசுத்தத்தையும், சரீரத்தின் பரிசுத்தத்தையும் சேர்த்துச் சொல்லுகிறார். நாம் வேசிமார்க்கத்திற்கு விலகும்போது நம்முடைய இருதயமும் பரிசுத்தமாயிருக்கும், நம்முடைய சரீரமும் பரிசுத்தமாயிருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் நம்முடைய சரீரத்தைப்பற்றிச் சொல்லும்போது, இதை "சரீர பாண்டம்" என்று சொல்லுகிறார் (1தெச 4:5). நம்முடைய சரீரம் ஆத்துமாவின் பாத்திரமாக அல்லது பாண்டகமாக இருக்கிறது. நம்முடைய சரீரத்தில் நம்முடைய ஆத்துமா வாசம்பண்ணுகிறது. நம்மை அசுத்தப்படுத்துகிற மோகஇச்சைகளிலிருந்து நம்முடைய ஆத்துமாவை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய சரீரத்தின் மோசஇச்சைகளுக்கு நம்முடைய ஆத்துமா அடிமையாகயிருக்கக்கூடாது. மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்களுடைய மாம்ச இச்சையை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது.

தேவனை அறியாத அஞ்ஞானிகள் மோசஇச்சைக்குட்படுகிறார்கள். இவர்கள் புறஜாதியார். தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பே இருக்கிறார்கள். இவர்களுக்கு தேவன் இல்லை. இவர்கள் தேவனை அறியவுமில்லை. அப்பேற்பட்ட அஞ்ஞானிகளைப்போல நாம் ஜீவிக்கக்கூடாது. புறஜாதியாரின் இருதயம் மனந்திரும்பவில்லை. அந்த ஆத்துமா இரட்சிக்கப்படவில்லை. ஆகையினால் அவர்கள் மோசஇச்சைக்குட்பட்டு, தங்களுடைய சரீர பாண்டத்தை அசுத்தப்படுத்துகிறார்கள்.

அசுத்தமான எல்லா பாவமும் நம்மை விட்டு நீங்கவேண்டும். வேசிமார்க்கம் அநியாயமான மார்க்கம். பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவன். வேசிமார்க்கத்தின் அநியாயத்தை சகித்துக்கொள்வதில்லை. அவர் வேசிமார்க்கத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். ஆகையினால் இந்த விஷயத்தில் விசுவாசிகள் யாரும் கர்த்தருடைய சித்தத்திற்கு மீறக்கூடாது. ஒருவரும் தன் சகோதரனை வஞ்சிக்கக்கூடாது (1தெச 4:6). இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் பொதுவான வியாக்கியானமும் சொல்லுகிறார்கள். சுவிசேஷத்திற்கு விரோதமாக யாரும் செயல்படக்கூடாது என்றும், யாரும் அநீதி செய்யக்கூடாது என்றும், ஏழைகளை ஒடுக்கக்கூடாது என்றும் வேதபண்டிதர்கள் இந்த வசனத்திற்குப் பொதுவாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். என்றாலும் அசுத்தமான பாவத்தினால், நாம் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. அநீதி பண்ணக்கூடாது. யாரையும் வஞ்சிக்கக்கூடாது என்பதே இதன் சரியான வியாக்கியானமாக இருக்கும்.

வேசித்தனமும், மோகஇச்சையும் மிகவும் மோசமான பாவம். இந்தப் பாவங்களை விரும்பி செய்கிறவர்களை தேவன் நீதியாய் நியாயந்தீர்ப்பார். நம்முடைய பரிசுத்தமான அழைப்புக்கு வேசித்தனம் விரோதமாக இருக்கிறது. கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர். வேசிமார்க்கத்தாரை நிச்சயமாகவே நீதியைச் சரிக்கட்டுவார்.

தேவன் நம்மை பரிசுத்தத்திற்கு அழைத்திருக்கிறார். அவர் அசுத்தத்திற்கு நம்மை அழைக்கவில்லை (1தெச 4:7). ஆகையினால் தேவனுடைய நியாயப் பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும் அசட்டை பண்ணுகிறவர்கள் தேவனையே அசட்டை பண்ணுகிறார்கள். அசட்டை பண்ணுகிறவர்கள் மனுஷரை அசட்டை பண்ணவில்லை. தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறார்கள் (1தெச 4:8). பாவத்தில் விழுந்துவிடாதபடி நம்மை எச்சரிப்பதற்காக தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்கு நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எச்சரித்து உணர்த்துவார். நாம் கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணும்போது, நமக்கு உதவிசெய்கிற பரிசுத்த ஆவியானவரையே அசட்டை பண்ணுகிறோம். தேற்றரவாளரை நாம் அசட்டைபண்ணும்போது நமக்கு சமாதானம் இருக்காது. சந்தோஷம் இருக்காது. நம்மீது சாபம் வரும். தேவன் நம்மை ஆசீர்வதிக்கமாட்டார். அவர் தம்முடைய நீதியை நம்மிடத்தில் சரிக்கட்டுவார். ஆகையினால் அசுத்தமான பாவவிஷயத்தில் கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். தேவனுடைய பிரமாணங்களை ஒருவரும் மீறக்கூடாது. நம்முடைய சகோதரரை யாரும் வஞ்சிக்கக்கூடாது. நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

சகோதர சிநேகம்
1தெச 4 : 9-12

1தெச 4:9. சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப் பட்டவர்களாயிருக்கிறீர்களே.

1தெச 4:10. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்து வருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்.

1தெச 4:11. புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு,

1தெச 4:12. நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சகோதர சிநேகத்தோடிருக்கவேண்டும். அன்பிலே நாம் இன்னும் அதிகமாய் பெருகவேண்டும். நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படி தேவனால் போதிக்கப்பட்டிருக்கிறோம். இந்தப் போதனை எல்லா விசுவாசிகளுக்கும் மிகவும் முக்கியமானது. ஆகையினால் சகோதர சிநேகத்தைக்குறித்து, தெசலோனிக்கேயருக்கு, தான் மறுபடியும் எழுதவேண்டியதில்லை என்று பவுல் தீர்மானம் செய்திருக்கிறார். ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது அடிப்படை உபதேசம். தெசலோனிக்கேயரும் இந்த உபதேசத்தை அங்கீகரித்து, மற்ற எல்லா சகோதரரிடத்திலும் அன்புகூருகிறார்கள். தெசலோனிக்கேயருக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணும்போது, அதை அவர்கள் அன்பாய் ஏற்றுக்கொள்கிறார்கள்.

தெசலோனிக்கேயரிடம் காணப்படுகிற ஆவிக்குரிய நற்குணங்களை பவுல் புகழ்ந்து சொல்லுகிறார். இந்த நற்குணங்கள் இவர்களுக்கு இயல்பாக வந்துவிடவில்லை. தேவனால் போதிக்கப்பட்டபடியினால்தான் இவர்களுக்கு நற்குணம் உண்டாயிருக்கிறது. இதன் மூலமாகவே தெசலோனிக்கேயர் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறார்கள். நன்மையான எல்லா காரியங்களையும் தேவனே நமக்குப் போதிக்கிறார். தேவனிடமிருந்து போதனையைப் பெற்றுக்கொள்ளும்போது, நாம் அதற்குக் கீழ்ப்படிந்து, அதன் பிரகாரம் ஜீவிக்கவேண்டும்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் நாம் முழுமனதோடும், முழு இருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் அன்புகூரவேண்டும். நம்மிடத்தில் அன்புகூருவதுபோல நாம் பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும். இது வேதாகமத்தின் அடிப்படை உபதேசம். தேவனால் போதிக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும், இந்த அடிப்படை உபதேசம் போதிக்கப்பட்டிருக்கும். நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று நமக்கு யாரும் போதிக்கவில்லை என்று எந்த விசுவாசியும் சாக்குப்போக்கு சொல்லமுடியாது. கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு அன்பே பிரதானம். நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தில் அன்பு விசுவாசிகளை ஆளுகை செய்யவேண்டும்.

ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு, தெசலோனிக்கேயர் தேவனால் போதிக்கப் பட்டவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் பெற்றுக்கொண்ட போதகத்திற்கு அவர்கள் முன்மாதிரிகளாகயிருக்கிறார்கள். தாங்கள் போதிக்கப்பட்டபடி மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லோருக்கும் செய்து வருகிறார்கள். அவர்களிடத்திலும் அன்பாயிருக்கிறார்கள். அவர்களுடைய அன்பு விஸ்தாரமாக பரவியிருக்கிறது. உண்மையான விசுவாசிகளெல்லோரும் எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்புகூரவேண்டும்.

தெசலோனிக்கேயர் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தாலும், அவர்கள் இன்னும் அதிகமாய் அன்புகூரவேண்டுமென்றும், அவர்கள் இன்னும் அதிகமாய் அன்பிலே பெருகவேண்டும் என்றும் பவுல் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். அவர்கள் இன்னும் அதிகமாய் ஜெபிக்க வேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஏற்கெனவே புத்திசொல்லியிருக்கிறார். அவர்கள் இன்னும் அதிகமாய் வேலை செய்யவேண்டுமென்று பவுல் அவர்களுக்கு ஏற்கெனவே புத்திசொல்லியிருக்கிறார். நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் வரையிலும் நமக்குப் பரிபூரணமில்லை.

நாம் பெற்றுக்கொள்ள வேண்டியவை இன்னும் அதிகமாயிருக்கிறது. நாம் பெருகவேண்டிய காரியங்கள் இன்னும் அதிகமாயிருக்கிறது (1தெச 4:10).

தெசலோனிக்கேயர் அமைதலுள்ளவர்களாயிருக்கும் படி நாடவேண்டும். தங்களுடைய அழைப்புக்கு அவர்கள் பாத்திரவான்களாய் நடந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரோடும் சண்டையிடுகிறவர்களாக இருக்கக்கூடாது. அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவேண்டும். அமைதலும், சமாதானமும் தேவனுடைய கிருபையினால் வரும். நாம் சமாதானம் பண்ணுகிறவர்கள். நம்மிடத்தில் கோபகுணம் காணப்படக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய அமைதியைக் கெடுப்பதற்கு சாத்தான் பல வழிகளில் முயற்சி செய்வான். சாத்தானாகிய வஞ்சக எண்ணத்திற்கு நம் இருதயத்தில் இடங்கொடுக்கக்கூடாது. நாம் எப்போதுமே அமைதி உள்ளவர்களாயிருக்கும்படி நாடவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் அமைதியாயிருப்பது எப்படி என்பதை தேவனுடைய சமுகத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். தெசலோனிக்கேயர் அமைதலுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலரும் அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள்.

தெசலோனிக்கேயர் தங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவேண்டும். வீண் அலுவல்காரர்கள் மற்றவர்களுடைய அலுவல்களில் தேவையில்லாமல் தலையிடுவார்கள். இவர்களுடைய மனதில் அமைதியிருக்காது. சமாதானம் இருக்காது. குழப்பத்திலிருப்பார்கள். தாங்கள் குழம்பினால் போதாது என்று, தங்களுடைய உற்றார் உறவினர், சிநேகிதர் எல்லோரையும் குழப்பிவிடுவார்கள். இவர்கள் மற்றவர்களுடைய நன்மையை கவனிக்கமாட்டார்கள். மற்றவர்களைப்பற்றி இவர்களுக்கு மெய்யாகவே கவலையில்லை. ஆனாலும் தங்களுடைய சொந்த அலுவல்களைப் பார்க்காமல், மற்றவர்களைப்பற்றியும், அவர்களுடைய அலுவல்களைப்பற்றியும் புரணி பேசுவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவன் நம்மை அழைத்த அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய சொந்தக் கைகளினாலே வேலை செய்யவேண்டும். நாம் எந்த வேலையும் செய்யவேண்டாமென்று கிறிஸ்து நமக்கு உபதேசம் செய்யவில்லை. நாம் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்க வேண்டுமென்று வேதவசனம் சொல்லவில்லை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வேலையை நாம் உண்மையோடு செய்யவேண்டும். நம்முடைய வேலையில் நாம் கருத்தாயும், கவனமாயும், உண்மையாயும் இருக்கவேண்டும் என்றுதான் கிறிஸ்து நமக்கு உபதேசிக்கிறார் (1தெச 4:12).

நாம் புறம்பாயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய நடத்தையில் உண்மையும் கண்ணியமும் இருக்கவேண்டும். நம்முடைய நடத்தையில் நற்சாட்சி இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நம்முடைய வாயினால் பிரசங்கம்பண்ணும்போது, நம்முடைய நல்ல நடத்தை சுவிசேஷத்திற்கு நற்சாட்சி சொல்லவேண்டும். அப்போதுதான் புறம்பே இருக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தின் விசேஷம் புரியும். அவர்களுடைய நல்ல ஆதரவை நாம் பெற்றுக்கொண்டு, அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய நமக்கு வாய்ப்பு கிடைக்கும். நாம் யோக்கியமாய் நடக்கும்போது, நமக்கு புறம்பேயிருக்கிறவர்களின் ஆதரவும், சில சமயங்களில் சத்துருக்களின் ஆதரவும் நமக்குக் கிடைக்கும். நமக்கு ஒன்றிலும் குறைவில்லாதிருக்கும்படி தேவன் விரும்புகிறார். புறஜாதியார் மத்தியில் நமக்கு ஒன்றும் குறைவில்லாதிருக்க வேண்டுமென்றால், நம்முடைய சொந்த அலுவல்களை நாம் பார்க்கவேண்டும்.

நம்முடைய சொந்த கைகளினால் வேலை செய்யவேண்டும். எல்லோரோடும் அமைதலுள்ளவர்களாயிருக்கும் படி நாடவேண்டும். கடினமாய் உழைக்கிறவர்களுக்கு ஒரு குறைவும் இராது. இவர்கள் தங்களுக்குத் தேவையான போஜனத்திற்கு கடினமாய் வேலை செய்வார்கள். வேலை செய்து போஜனம்பண்ணும்போது அதில் ஒரு திருப்தியும் சந்தோஷமும் இருக்கும். கர்த்தர் நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிக்க விரும்புகிறார். தங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்காமல், மற்றவர்களுடைய அலுவல்களைப்பற்றி புரணி பேசுகிறவர்கள், தங்கள் வாய்களின் பிரயாசம் ஆசீர்வதிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். கர்த்தர் இப்படிப்பட்டவர்களுடைய வாய்களின் பிரயாசத்தை ஆசீர்வதிக்கமாட்டார். தம்முடைய பிள்ளைகளுடைய கைகளின் பிரயாசத்தையே ஆசீர்வதிப்பார்.

நித்திரையடைந்தவர்கள்
1தெச 4 : 13-18

1தெச 4:13. அன்றியும், சகோதரரே, நித்திரை அடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

1தெச 4:14. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.

1தெச 4:15. கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.

1தெச 4:16. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

1தெச 4:17. பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

1தெச 4:18. ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

தெசலோனிக்கேயருடைய உற்றார் உறவினரில் சிலரும், அவர்களுடைய சிநேகிதரில் சிலரும் கர்த்தருக்குள் மரித்துப்போயிருக்கிறார்கள். அவர்கள் நித்திரையடைந்திருக்கிறார்கள் என்று பவுல் சொல்லுகிறார். தெசலோனிக்கேயர் அவர்கள் நிமித்தமாய் துக்கித்துப் புலம்புகிறார்கள். ஆனால் அவர்கள் துக்கித்துப் புலம்பவேண்டிய அவசியமில்லையென்று பவுல் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார்.

நித்திரையடைந்தவர்களினிமித்தம் துக்கிக்கிறவர்கள் நம்பிக்கையற்றவர்கள். அவர்களுக்கு நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கையில்லை. பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கையில்லை. அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றியும், அவருடைய இரண்டாம் வருகையைப்பற்றியும், கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் நித்தியகாலமாய் ஜீவிப்பார்கள் என்பது பற்றியும் அறிவு இல்லை. நம்முடைய உற்றார் உறவினர் அல்லது சிநேகிதர் கர்த்தருக்குள் மரித்துப்போகும்போது நம்முடைய இருதயத்தில் துக்கம் இருக்கும். கண்ணீர் வரும். ஆனால் நாம் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போல துக்கித்து அறிவில்லாதிருக்கக்கூடாது. நம்முடைய துக்கத்திலும், வருத்தத்திலும் ஒரு வரையறையும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். மற்றவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்கள் என்பதற்காக நாம் துக்கப்பட வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கர்த்தருடைய பார்வையில் நேர்த்தியாக இல்லையே என்று நாம் துக்கப்படலாம். நம்முடைய ஆவிக்குரிய தோல்வியினிமித்தம் நாம் கர்த்தருடைய சமுகத்தில் துக்கித்துப் புலம்பலாம். புலம்பி அழலாம். இதனால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கும்.

நித்திரை அடைந்தவர்களினிமித்தம் நாம் துக்கித்துப் புலம்பும்போது, நாம் நம்பிக்கையற்றவர்களைப் போல இருக்கிறோம். புறஜாதி ஜனங்களைப்போல இருக்கிறோம். அவர்களுக்கு இப்பிரபஞ்சத்தின் ஜீவியம் மாத்திரம்தான் தெரியும். நாம் மரித்தபின்பு நமக்கு ஒரு நித்திய ஜீவன் உண்டு என்று புறஜாதியாருக்குத் தெரியாது. இப்பிரபஞ்சத்தின் ஜீவனைவிட, நித்திய ஜீவன் மகிமையானது என்பதும், மேன்மையானது என்பதும், ஆசீர்வாதமானது என்பதும் புறஜாதியாருக்குத் தெரியாது. ஆகையினால் அவர்கள் நித்திரை அடைந்தவர்களினிமித்தம், துக்கித்துப் புலம்புகிறார்கள்.

நாமோ மகிமையான நித்திய ஜீவனை நம்புகிறோம். நாம் நித்திரையடையும்போது நமக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகையினால் நம்முடைய உற்றார், உறவினர், சிநேகிதர் யாராவது கர்த்தருக்குள் நித்திரையடையும் போது, அவர்களுடைய நித்திய ஜீவனைப்பற்றி நாம் அறிவில்லாதவர்களாக இருக்கக்கூடாது. நமக்கு இந்த விஷயத்தில் அறிவு இருக்குமென்றால், நாம் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்துப் புலம்பமாட்டோம்.

கர்த்தருக்குள் மரித்துப்போனவர்கள், கர்த்தருக்குள் நித்திரை அடைந்திருக்கிறார்கள். தொந்தரவு நிறைந்த இப்பிரபஞ்சத்திலிருந்து அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பிரபஞ்சத்தின் வருத்தங்களிலிருந்தும், பாடுகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும் விடுதலை பெற்று, அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்திருக்கிறார்கள். இவர்கள் நித்தியமாய் மரித்துப்போகவில்லை. இவர்களுடைய ஜீவன் நித்தியமாய் இவர்களைவிட்டுக் கடந்து போய்விடவில்லை. சரீர மரணத்தினால் இவர்களுக்கு ஒரு இழப்பும் ஏற்படவில்லை. இழப்புக்குப் பதிலாக இவர்களுக்கு மிகப்பெரிய ஆதாயம் கிடைத்திருக்கிறது. இந்த உலகத்தின் பாடுகளிலிருந்து விடுதலை பெற்று, கர்த்தருக்குள் நித்திரையடைந்திருப்பதினால், இவர்கள் இப்பிரபஞ்சத்திலிருந்து விடுதலை பெற்று, பரலோகத்தில் பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள் (1தெச 4:13).

இயேசுவானவர் மரித்தார். அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். மூன்றாம் நாளிலே அவர் மறுபடியும் உயிரோடு எழுந்தார். கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கிறோம். அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூட கொண்டு வருவார் (1தெச 4:14). கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் கர்த்தரோடு நித்தியகாலமாய் ஜீவிப்பார்கள். இப்பிரபஞ்சத்தில் உயிரோடிருந்தபோது இருந்ததைவிட, பரலோகத்தில் மிகவும் மேன்மையான ஆசீர்வாதமான ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இப்பிரபஞ்சத்தின் ஜீவனைவிட பரலோகத்தின் ஜீவன் மிகவும் ஆசீர்வாதமானது.

தேவன் இந்தப் பூமிக்கு வரும்போது, இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களை, தேவன் கிறிஸ்துவோடேகூட கொண்டு வருவார். மரித்தோரின் உயிர்த்தெழுதலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆசீர்வாதமான உபதேசம். நமக்கு மரணபயம் வரும்போதெல்லாம் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், அவருடைய இரண்டாம் வருகையையும் நாம் தியானிக்கவேண்டும்.

நம்முடைய சிநேகிதரும், உற்றார் உறவினரும் மரித்துப்போகும்போது, அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்திருக்கிறார்களென்றும், அவர்கள் மறுபடியும் உயிரோடு எழுப்பப்படுவார்களென்றும், இயேசுகிறிஸ்துவோடு நித்தியகாலமாய் ஜீவிப்பார்களென்றும் நாம் விசுவாசிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் இந்த விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணி, மரணபயத்தையும், மரணதுக்கத்தையும் நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று நாம் விசுவாசிக்கிறோம். இந்த விசுவாசம் நமக்குள் உறுதியாயிருக்கவேண்டும். நாமும் உயிர்த்தெழுவோம் என்னும் நம்பிக்கையும், நிச்சயமும் நமக்குள் உண்டாயிருக்கவேண்டும்.

கர்த்தருக்குள் நித்திரை அடைந்தவர்களுடைய நிலமை மகிமையுள்ளதாக இருக்கும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் சந்தோஷப்படுவார்கள். அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு, கர்த்தருடைய இந்த வார்த்தையை முன்னிட்டு, அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார் (1தெச 4:15). கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார் (1தெச 4:16). அவர் பரலோகத்திலிருந்து இறங்கி இந்தப் பூமிக்கு வருவார். அவருடைய வருகையின்போது மகா ஆரவாரமுண்டாகும். பிரதான தூதனுடைய சத்தமுண்டாகும். தேவஎக்காளம் தொனிக்கும். அப்போது கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வருவார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரதான மீட்பராகவும், நியாயாதிபதியாகவும் வானத்திலிருந்து இறங்கி வரும்போது தேவஎக்காளம் தொனிக்கும். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (1தெச 4:16). கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை (1தெச 4:15). கர்த்தருடைய வருகையின்போது, உயிரோடிருக்கிற நம்முடைய சரீரம் மறுரூபமடையும் கர்த்தருடைய வருகையின்போது, உயிரோடிருக்கிற நாம், கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் (1தெச 4:17).

நாம் ஆகாயத்திலே நம்முடைய கர்த்தரைச் சந்திப்போம். கர்த்தருடனேகூட எப்பொழுதும் இருப்போம். கர்த்தருடைய வருகையின் நாள் வருடைய பரிசுத்தவான்களுக்கு சந்தோஷம் மிகுந்த நாள். ஏனெனில் அதுமுதல் நாமெல்லோரும், எப்பொழுதும் கர்த்தருடனே கூடயிருப்போம். கர்த்தரோடு கூடயிருப்பதுதான் பரலோகத்தின் ஆசீர்வாதம். நாம் கர்த்தரைத் தரிசிப்போம். அவரோடுகூட வாசம்பண்ணுவோம். அவருடைய சமுகத்தில் சந்தோஷமாயிருப்போம். இந்த சந்தோஷம் நித்திய சந்தோஷமாயிருக்கும்.

நம்முடைய சிநேகிதர்கள், உற்றார் உறவினர்கள், கர்த்தருக்குள் நித்திரையடையும்போது, நமக்கு துக்கம் வரலாம். ஆனாலும் நம்பிக்கையற்றவர்களைப்போல நாம் துக்கித்து அறிவில்லாதிருக்கக்கூடாது. மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது நாமெல்லோரும் ஆகாயத்திலே கர்த்தருடனேகூட எப்போதும் இருப்போம் என்பதையும் நினைவுகூர்ந்து, நம்முடைய துக்கத்தை நீக்கி ஆறுதலடையவேண்டும்.

இந்த உபதேசத்தைச் சொல்லி விசுவாசிகள் ஒருவரையொருவர் ஆறுதல் படுத்தவேண்டும். "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1தெச 4:18) என்றும், "நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" (1தெச 4:13) என்றும் அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்குப் புத்தி சொல்லுகிறார்.

5 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாவது நிருபம், நான்காவது அதிகாரத்தில், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், அவருடைய இரண்டாம் வருகையையும் பற்றி சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகை எப்போது இருக்கும், அது எப்படியிருக்கும் என்னும் சத்தியத்தை பவுல் தொடர்ந்து சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகை சடுதியாயிருக்கும். இரவிலே திருடன் வருகிற விதமாக நினையாத நேரத்திலிருக்கும்.

ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாகயிருப்பதினால், இயேசு கிறிஸ்துவின் வருகை நமக்கு சந்தோஷமும், சமாதானமும் நிறைந்ததாகயிருக்கும் (1தெச 5:1-5). விசுவாசிகளாகிய நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு, தெளிந்தவர்களாயிருக்க வேண்டும். விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவை நம்மிடத்திலிருந்து வெளிப்பட வேண்டும் (1தெச 5:6-10). விசுவாசிகள் ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யவேண்டும் (1தெச 5:11-15). நாம் எப்போதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டும் (1தெச 5:16-22). முடிவுரை (1தெச 5:23-28).

கர்த்தருடைய நாள்
1தெச 5 : 1-5

1தெச 5:1. சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

1தெச 5:2. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 5:3. சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை.

1தெச 5:4. சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.

1தெச 5:5. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார். வானத்திற்குப் பரமேறிப்போனார். அவர் மறுபடியும் இந்தப் பூமிக்கு வருவார். அவருடைய வருகையின் நாள், "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தருடைய நாள் எப்போது இருக்குமென்று ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகச் சொல்லுகிறார்கள். தங்களுடைய மனதின் எண்ணங்களையெல்லாம் உபதேசங்களாகப் போதிக்கிறார்கள்.

கர்த்தருடைய நாள் எப்போது இருக்கும் என்பதை விசாரிப்பதும், தெரிந்துகொள்ளப் பிரியப்படுவதும் விசுவாசிகளுக்கு தேவையில்லாத காரியம். அப்போஸ்தலர் பவுல் இதைப்பற்றிச் சொல்லும் போது, "சகோதரரே, இவைகள் நடக்கும் காலங்களையும், சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை" (1தெச 5:1) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நாள் நிச்சயமாய் வரும். அவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நிச்சயமாகவே வருவார். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய வருகையின் நாளைப்பற்றி நமக்கு தெளிவான வெளிப்பாடு எதுவும் கொடுக்கவில்லை. இது தெய்வீக இரகசியமாக இருக்கிறது. நாம் அறிந்துகொள்ள முடியாத காரியங்கள் தேவனுக்கே உரியது. தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, ஏற்ற வேளையில், தம்முடைய இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்துவார். ஆகையினால் கர்த்தருடைய நாள் எப்போது வருமென்று ஆராய்ச்சி செய்வது விசுவாசிகளுக்கு தேவையில்லாத காரியம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவன் பல்வேறு ஊழியங்களைக் கொடுத்திருக்கிறார். நாம் நிறைவேற்றுவதற்கு நமக்கு வேலைகளைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற வேலைகளையெல்லாம், அந்தந்த காலங்களில் நாம் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். இந்த வேலையை எப்படி செய்வது, எப்போது செய்வது என்பதையெல்லாம் நாம் தெரிந்து வைத்திருக்கவேண்டும். நாம் செய்கிற வேலைகளைப் பற்றி கர்த்தருடைய சமுகத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய நாள் எது என்பது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

கர்த்தருடைய நாள் எப்போது வருமென்று நமக்கு அறிவிக்கப்படா விட்டாலும், அந்த நாளைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் எல்லா விசுவாசிகளுக்கும் இருக்கிறது. தங்களுடைய ஆர்வத்தின் மிகுதியால் ஒரு சிலர் கர்த்தருடைய நாளை கற்பனை செய்து, தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். "கர்த்தருடைய நாள்" மாத்திரமல்ல, கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தாத இரகசியம் இன்னும் ஏராளமாய் உள்ளது. கர்த்தர் வெளிப்படுத்தாத காரியங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. அந்த நாளைப்பற்றி நாம் தெரிந்து வைத்திருப்பது தேவனுடைய சித்தமல்ல. நமக்கு நன்மையானது எதையும் தேவன் நமக்கு மறைக்கமாட்டார். ஆனாலும் கர்த்தருடைய நாள் எப்போது வருமென்று நமக்கு இப்போது தெரியாது.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய நாள் எப்படி வருமென்று விவரமாகச் சொல்லுகிறார். அந்த நாள் சடுதியாய் வரும். மனுஷரில் அநேகருக்கு கர்த்தருடைய நாள் மிகுந்த ஆச்சரியத்தைத் தரும். இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வரும். திருடன் இரவு வேளையில், யாரும் எதிர்பாராத நேரத்தில் வருவான். அவன் எப்போது வருவான் என்பது யாருக்கும் தெரியாது. அதுபோலவே கர்த்தருடைய நாள் வரும். கர்த்தருடைய நாளானது நமக்கு மிகுந்த ஆச்சரியமான நாளாயிருக்கும் (1தெச 5:2).

இந்தப் பூமியிலே விசுவாசிகளும் அவிசுவாசிகளும் கலந்திருக்கிறார்கள். அவிசுவாசிகள் கர்த்தருக்குப் பயப்படாமல், துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய நாள் துன்மார்க்கருக்கு பயங்கரமான நாளாகயிருக்கும். கர்த்தருடைய நாளின்போது அவர்கள் மேல் அழிவு சடுதியாய் வரும். துன்மார்க்கர் இந்தப் பிரபஞ்சத்தில் பாதுகாப்பாகயிருப்பதாக நினைக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் இறுமாப்படைந்திருக்கிறது. தங்களுக்கு ஒரு ஆபத்தும் வராது என்று சொல்லுகிறார்கள்.

"சமாதானமும் சவுக்கியமும் தங்களுக்கு உண்டு" என்று துன்மார்க்கர் தங்கள் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இவையெல்லாவற்றையும்மீறி கர்த்தருடைய நாளின்போது, அவர்கள்மேல் அழிவு சடுதியாய் வரும் (1தெச 5:3).

துன்மார்க்கர்மேல் வரும் அழிவை பவுல் கர்ப்பதியானவளுக்கு வருகிற வேதனையோடு ஒப்பிடுகிறார். கர்ப்பவதிக்கு குறிப்பிட்ட காலத்தில் கர்ப்ப வேதனை வரும். ஒருவேளை அவள் எதிர்பாராத வேளையில் அவளுக்கு வேதனை வரலாம். அவள் எதிர்பார்க்கிறாளோ அல்லது எதிர்பார்க்க வில்லையோ, கர்ப்பவதியானவளுக்கு நிச்சயமாய் வேதனை வரும். அதை அவளால் தவிர்க்க முடியாது. அந்த வேதனையிலிருந்து கர்ப்பவதியால் தப்பிப்போகவும் முடியாது.

அதுபோலவே கர்த்தருடைய நாளின்போது துன்மார்க்கர்மேல் அழிவு சடுதியாய் வரும். துன்மார்க்கர் அந்த அழிவிலிருந்து தப்பிப்போவதில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு கர்த்தருடைய நாள் ஆசீர்வாதமான நாளாயிருக்கும். கர்த்தரை விசுவாசிக்கிற நமக்கு அவருடைய நாளின்போது சந்தோஷமும், ஆறுதலும் உண்டாகும். நாம் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்ல. நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்ல. கர்த்தரை விசுவாசிக்கிற நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும், பகலின் பிள்ளைகளாகவும் இருக்கிறோம். இந்தச் சிலாக்கியம் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதம்.

தெசலோனிக்கேயர் கர்த்தருக்குள் உறுதியாய் நிலைத்திருக்கிறார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறார்கள். அவர்கள் பாவத்திற்கு அடிமைகளாகவில்லை. புறஜாதியாரைப் போல தெசலோனிக்கேயர் தேவனை அறியாதவர்களாகவும் இல்லை. தெசலோனிக்கேயர் அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்ல. அவர்கள் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்ல. அவர்கள் பகலின் பிள்ளைகள். வெளிச்சத்தின் பிள்ளைகள். நீதியின் சூரியன் அவர்கள்மீது உதித்திருக்கிறார். கிறிஸ்துவின் பிரகாசம் அவர்களுடைய முகத்தில் பிரகாசிக்கிறது.

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் அந்தகாரத்திலிருக்கமாட்டார்கள். புறஜாதியாரோ இருளிலும், அந்தகாரத்திலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷத்தின் வெளிச்சம் கிடைக்கவில்லை. அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மரண இருளிலிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தருடைய நாள் திருடனைப்போல அவர்கள்மேல் வரும். அவர்கள்மேல் அழிவு சடுதியாய் வரும். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ இப்படிப்பட்ட அழிவு உண்டாகாது.

தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷம் பிரசங்கம் பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாளைப்பற்றி அவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். கர்த்தருடைய வருகையின் போது அவர்களும் அவரோடுகூட எடுத்துக் கொள்ளப்படத்தக்கதாய், அவர்கள் அதற்குப் பாத்திரவான்களாய் ஜீவிக்க வேண்டும். இப்படிப்பட்ட உபதேசங்கள் எல்லாம் தெசலோனிக்கேயருக்கு அப்போஸ்தலர் மூலமாய் அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக தெசலோனிக்கேயர் நம்பிக்கையோடும், ஆறுதலோடும் நிற்கத்தக்கதாக அவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் வருகையானது தெசலோனிக்கேயருக்கு பயங்கரமானதாக இருக்கக் கூடாது. இயேசுகிறிஸ்து வரும்போது அவர் நமக்கு இரவிலே திருடன் வருகிற விதமாக இருக்கக்கூடாது. அவர் பகலிலே வருகிற சிநேகிதரைப்போல இருக்கவேண்டும்.

தூங்காமல் விழித்துக்கொண்டு 1தெச 5 : 6-10

1தெச 5:6. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

1தெச 5:7. தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள்.

1தெச 5:8. பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

1தெச 5:9. தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப் படைவதற்கென்று நியமித்தார்.

1தெச 5:10. நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விழித்திருக்கிறவர்களாகவும், தெளிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். இவ்விரண்டும் வெவ்வேறு சுபாவங்கள். என்றாலும் இவ்விரண்டு சுபாவங்களும் நம்மிடத்தில் இசைந்து காணப்பட வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் காத்துக் கொள்ள வில்லையென்றால், நம்மால் தெளிந்தவர்களாயிருக்க முடியாது. நாம் தெளிந்தவர்களாயிருக்கவில்லையென்றால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மால் விழித்திருக்க முடியாது. ஆகையினால் இவ்விரண்டு சுபாவங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவ்விரண்டுமே நமக்கு தேவையானவை.

"மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கவேண்டும்". நாம் கவனக்குறைவாக இருக்கக் கூடாது. எல்லாமே நமக்கு பாதுகாப்பாக இருக்கிறது என்று அசட்டையாக இருக்கக்கூடாது. நம்மிடத்தில் ஆவிக்குரிய சோம்பல்தனம் காணப்படக்கூடாது. நாம் சும்மாயிருக்கக் கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாக சத்துரு கிரியை செய்கிறான். நாம் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தால் தான் சத்துருவோடு யுத்தம்பண்ண முடியும்.

நம்முடைய கடமைகளில் அசட்டையாயிருப்போமென்றால் சத்துருவின் சோதனை நமக்கு அதிகமாய் வரும். தூங்கிறவர்கள் இப்பிரபஞ்சத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நாமோ பரலோகத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம். மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் விழித்திருந்து, பரலோகத்தின் காரியங்களைக் குறித்து தெளிந்தவர்களாயிருக்க வேண்டும்.

தூங்குகிறவர்கள் சொப்பனம் காண்பார்கள். சொப்பனமெல்லாம் மெய்யானவை என்று சொல்லமுடியாது. தூங்குகிறவர்களை சொப்பனம் வஞ்சித்துவிடும். அவர்கள் சொப்பனத்தில் பரலோகம் போவதுபோல நினைப்பார்கள். ஆனால் அவர்களுடைய மெய்வாழ்க்கையில் நரகத்திற்கு நேராகப் போய்கொண்டிருப்பார்கள். ஆகையினால் தான் மற்றவர்கள் தூங்குகிறதுபோல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தூங்காமல் விழித்திருக்கவேண்டும்.

நாம் தெளிந்தவர்களாயும் இருக்க வேண்டும். கர்த்தர் நமக்கு அனுமதித்திருக்கிற வரையறைக்குட்பட்டு, இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களை அனுபவிக்க வேண்டும். பெருந்தீனி உண்ணாமல் கர்த்தர் நமக்குக் கொடுக்கிற போஜனத்தை ஸ்தோத்திரத்தோடே புசிக்க வேண்டும்.

எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு வசதியிருந்தாலும், கர்த்தர் நமக்கு அனுமதிப்பதை மாத்திரம் அனுபவிக்க வேண்டும். எல்லா காரியங்களிலும் நமக்கு தெளிந்த சிந்தனை வேண்டும்.

ஒவ்வொரு விசுவாசியும் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்க வேண்டும். தெளிந்தவர்களாயிருக்க வேண்டும். இது நம்முடைய ஆவிக்குரிய சுபாவம். இது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறோம். நாம் இரவுக்கும், இருளுக்கும் உரியவர்களல்ல. நாம் அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்ல. இரவுக்கும் இருளுக்கும் உரியவர்கள் தூங்குவார்கள். நாமோ வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருப்பதினால், தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கவேண்டும்.

தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள். வெறிகொள்கிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்வார்கள் (1தெச 5:7). தூங்குகிறவர்களுக்கு தங்களுக்கு அருகாமையில் வரும் ஆபத்து தெரியாது. ஏனெனில் அவர்கள் தூக்கத்திலிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கடமைகளை உணருவதில்லை. ஏனெனில் அவர்கள் வெறிகொண்டவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ இவையெல்லாம் தகாத சுபாவங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும். தூங்காமல் விழித்திருக்க வேண்டும். நமக்கு ஆவிக்குரிய சத்துருக்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் பல விஷயங்களில் நம்மைவிட பலவான்கள். துர்சிந்தையுடையவர்கள். நமக்கு தீங்கு செய்கிறவர்கள். நம்முடைய சத்துருக்கள் நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஆயுதங்களில் மூன்று முக்கியமான பகுதிகள் உள்ளன. விசுவாசம், அன்பு, நம்பிக்கை என்பவையே அந்த மூன்று முக்கிய பகுதிகளாகும். நாம் பகலுக்குரியவர்கள் பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருக்கவேண்டும். விசுவாசத்தில் ஜீவிக்க வேண்டும். விசுவாசம் நம்மை தூங்காமல் விழித்திருக்கச் செய்யும். விசுவாசம் நம்மை தெளிந்தவர்களாக்கும். நம்முடைய சத்துரு நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, விசுவாசம் நம்மைக் காக்கிற முக்கியமான ஆயுதம். இது நமக்கு மார்க்கவசத்தைப் போன்றது.

நம்முடைய இருதயத்தில் அன்பு நிரம்பியிருக்க வேண்டும். நம்மிடத்தில் அன்புகூருவதுபோல, நாம் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும். தேவனிடத்திலும் அன்புகூர வேண்டும். தேவனுடைய காரியங்களிலும் அன்புகூர வேண்டும். தேவனிடத்தில் நாம் பயபக்தியாய் அன்புகூரவேண்டும். இப்படிப்பட்ட அன்பு நம்மை தூங்காமல் விழித்திருக்கச் செய்யும். இந்த அன்பு நம்மை தெளிந்தவர்களாய் இருக்கச் செய்யும். நம்முடைய அன்பு நமக்கு மார்க்கவசத்தைப் போன்றது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் போது, இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவை தரித்துக்கொண்டிருக்க வேண்டும். நித்திய ஜீவனைப்பற்றிய நல்ல நம்பிக்கை நம்மிடத்தில் உறுதியாயிருக்க வேண்டும். தலைச்சீரா நம்முடைய தலையைப் பாதுகாக்கிற கவசம். இப்பிரபஞ்சத்தின் ஆசையினால் வரக் கூடிய ஆபத்துக்களிலிருந்து, நம்முடைய தலையை இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீரா பாதுகாக்கும். நம்முடைய தலைக்கு எப்போதுமே ஆபத்து வருமென்று சொல்ல முடியாது. அதே வேளையில் நமக்கு எப்போது ஆபத்து வரும் என்பது நமக்குத் தெரியாது. ஆகையினால் நாம் எப்போதுமே இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவை தரித்துக்கொண்டவர்களாயிருக்க வேண்டும் (1தெச 5:8).

நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபரிசுத்தத்தினாலோ நாம் இரட்சிக்கப்படுவதில்லை. நம்முடைய இரட்சிப்புக்கு கிறிஸ்துவே ஆதாரமாகயிருக்கிறார். அவரே நம்முடைய நம்பிக்கை. நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் நாம் நீதிமானாக்கப்படுவதில்லை. நம்முடைய சுயநீதியினால் நம்மால் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. சுயநீதியினால் இரட்சிப்பு உண்டாகும் என்பது சுவிசேஷத்திற்கே முரண்பட்ட உபதேசம். இது கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் விரோதமானது. நம்முடைய இரட்சிப்புக்கு நாம் இயேசுகிறிஸ்துவையே சார்ந்திருக்க வேண்டும்.

தேவன் நம்மை கோபாக்கினைக் கென்று நியமிக்கவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் அவர் நம்மை இரட்சிப்படையவதற்கென்று நியமித்திருக்கிறார் (1தெச 5:9). நம்முடைய இரட்சிப்பின் ஆதாரத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, நம்முடைய இரட்சிப்புக்கு நாம் காரணமல்ல என்பது தெரியவரும். நம்முடைய இரட்சிப்புக்கு தேவனே காரணம். தேவன் நம்முடைய இரட்சிப்பை நியமித்திருக்கிறார். இயேசுகிறிஸ்து மூலமாய் நமக்கு இரட்சிப்பு உண்டாக வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். நம்முடைய நம்பிக்கை இந்தச் சத்தியத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தரை நம்புகிறவர்கள் அசைக்கப்படுவதில்லை. நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும்போது நம்முடைய நம்பிக்கையும் அசைக்கப்படாது.

நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய ஜீவனை கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். நம்மை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து தம்முடைய சுயஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். கிறிஸ்து இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை. அவருடைய இரட்சிப்பின் கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நமக்காக மரித்த, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நமக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது.

நம்முடைய இரட்சிப்புக்கு இயேசு கிறிஸ்துவே காரணகர்த்தா. ஆகையினால் நம்முடைய நம்பிக்கையை நாம் இயேசுகிறிஸ்துவின் மீதே வைக்க வேண்டும். தேவன் நம்மை இரட்சிப்படைவதற்கென்று நியமித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பரிகாரத்தின் மூலமாய் மாத்திரமே நமக்கு இரட்சிப்பு உண்டாயிற்று.

"நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும்,தம்முடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே" (1தெச 5:10). நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிறவர்களாயிருந்தாலும், கர்த்தருக்குள் நித்தியடைந்தவர்களாயிருந்தாலும், நாம் இயேசுகிறிஸ்துவுடனே கூட நித்திய காலமாய் பிழைத்திருப்போம். நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து நமக்காக மரித்தார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருக்குரியவர்கள். நாம் பிழைத்தாலும் மரித்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்காக பிழைக்கவேண்டும், அவருக்காகவே மரிக்கவேண்டும். நாம் இப்பிரபஞ்சத்திலிருக்கும் போது நாம் அவருக்காக பிழைக்கவேண்டும். நாம் மரித்து பரலோகத்திலிருக்கும் போது அவரோடுகூட நித்தியகாலமாய் பிழைத்திருக்கவேண்டும்.

விசுவாசிகளின் கடமைகள்
1தெச 5 : 11-15

1தெச 5:11. ஆகையால் நீங்கள் செய்துவருகிற படியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

1தெச 5:12. அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,

1தெச 5:13. அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்.

1தெச 5:14. மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

1தெச 5:15. ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் வரையிலும், கர்த்தர் நமக்கென்று சில கடமைகளைக் கொடுத்திருக்கிறார். விசுவாசிகள் ஒவ்வொருவரும் தனக்கானதை மாத்திரமல்ல, பிறருக்கானதையும் கவனிக்கவேண்டும். மற்றவர்களிடத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் நமக்கு உண்டு. நாம் ஒருவரையொருவர் தேற்றவேண்டும். ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய ரீதியாய்ப் புத்திசொல்ல வேண்டும். ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி நடந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய வசதிகளையும், நம்முடைய நன்மைகளையும் மாத்திரம் நாம் கவனித்தால் போதாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்ற விசுவாசிகளுடைய நன்மைகளையும் கவனிக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகுமாறு பேசவேண்டும். பக்திவிருத்திக்கேதுவான காரியங்களைச் செய்யவேண்டும். வேதாகமத்தில் நமக்குத் தெரிந்திருக்கிற வசனங்களையும், சத்தியங்களையும் மற்றவர்களுடைய பக்திவிருத்திக்கேதுவாக அவர்களோடு பகிர்ந்து சொல்லவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து சொல்லி, அவர்களுக்கு பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யவேண்டும். சோர்ந்துபோயிருக்கிற மற்ற விசுவாசிகளை சத்திய வசனங்களினாலும், நம்முடைய ஆவிக்குரிய அனுபவ சாட்சிகளினாலும் உற்சாகப்படுத்தவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும். அவர்களோடு சேர்ந்து கர்த்தரைத் துதிக்கவேண்டும். மற்ற விசுவாசிகளுக்கு முன்பாக நாம் நல்ல சாட்சிகளாக இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் தெசலோனிக்கே சபையார் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு நல்ல மாதிரிகளாகயிருக்கிறார்கள். நன்மை செய்கிறவர்கள் இன்னும் அதிகமாய் நன்மை செய்ய வேண்டுமென்று நாடவேண்டும். தாங்கள் செய்கிற நன்மைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று விரும்ப வேண்டும். விசுவாசமுள்ளவர்கள் தங்கள் விசுவாசத்தில் விருத்தியடையவேண்டும். அன்புள்ளவர்கள் தங்கள் அன்பில் பெருகவேண்டும் (1தெச 5:11).

விசுவாசிகளுக்கு கர்த்தருடைய ஊழியக்காரரிடத்திலும் கடமை உண்டு (1தெச 5:12,13). கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருக்குள்ளே பிரயாசப்படுகிறார்கள். அவர்கள் விசுவாசிகளை கர்த்தருக்குள் விசாரணை செய்கிறார்கள். விசுவாசிகளுக்குப் புத்திசொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளின் ஆத்துமாக்களுக்கு வேலையாட்களாகயிருக்கிறார்கள். அவர்கள் பிரயாசப்பட்டு ஊழியம் செய்கிறார்கள். விசுவாசிகளின் ஆவிக்குரிய காரியங்களை விசாரணை செய்கிறார்கள். ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கு உதவியாயிருக்க வேண்டும். உபத்திரவமாயிருக்கக்கூடாது.

ஊழியக்காரர்கள் தங்களுடைய விசுவாசிகளை விசாரணை செய்து ஆளுகை செய்யவேண்டும். கடின இருதயத்தோடு ஆளுகை செய்யக்கூடாது. அன்போடும் கரிசனையோடும் ஆளுகை செய்ய வேண்டும். அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் புத்திசொல்ல வேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசிகளை வழிநடத்தவேண்டும். மேய்ப்பர்கள் மந்தைக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

ஊழியக்காரர்கள், கர்த்தருக்குள் விசுவாசிகளை விசாரணை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் விசுவாசிகளை கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி விசாரணை செய்ய வேண்டும். விசுவாசிகளை விசாரித்தால் மாத்திரம் போதாது. அவர்களை ஆளுகை செய்தால் மாத்திரம் போதாது. அவர்களுக்கு ஆவிக்குரிய புத்தியும் சொல்லவேண்டும். விசுவாசிகள் தவறு செய்யும்போது அவர்களை கடிந்துகொள்ளவேண்டும். நன்மை செய்யும்போது அவர்களை கர்த்தருக்குள் உற்சாகப்படுத்தவேண்டும்.

விசுவாசிகளுக்கு தங்களுடைய ஊழியக்காரரைப் பற்றி நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். மேய்ப்பன் ஆடுகளை அறிந்திருக்கிறான். ஆடுகளும் மேய்ப்பனை அறிந்திருக்கிறது. மேய்ப்பனுடைய சத்தத்தைக் கேட்டு அவனுக்குப் பின்செல்கிறது. விசுவாசிகள் தங்கள் ஊழியக்காரரை அறிந்திருந்து, அவர்கள்மீது அதிகமாய் அன்புகூர வேண்டும். அவர்களுடைய பிரயாசங்களையும், விசாரணைகளையும், கிரியைகளையும் விசுவாசிகள் அறிந்து கொண்டு அவர்களை மதிக்கவேண்டும். அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளவேண்டும்.

கர்த்தரே தம்முடைய ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார். அவர்களை அபிஷேகம் செய்திருக்கிறார். அவர்கள் செய்கிற ஊழியத்தினிமித்தமாய் விசுவாசிகள் அவர்கள்மீது அன்புகூர வேண்டும். அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளவேண்டும். விசுவாசிகள் மத்தியிலே கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட வேண்டுமென்பதும், விசுவாசிகளின் ஆத்துமாக்கள் செழிக்க வேண்டுமென்பதும் ஊழியக்காரர்களின் நோக்கம். இதற்காகவே அவர்கள் விசுவாசிகளுக்குள் பிரயாசப்படுகிறார்கள். இதற்காகவே அவர்கள் கர்த்தருக்குள் விசுவாசிகளை விசாரணை செய்கிறார்கள். இதற்காகவே அவர்கள் விசுவாசிகளுக்குப் புத்தி சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை விசுவாசிகள் மதிக்க வேண்டும். அவர்களுடைய ஊழியத்தினிமித்தமாய் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் தம்முடைய உண்மையுள்ள ஊழியக்காரரை மேன்மைப்படுத்துவார். தமக்காக அவர்கள் உண்மையாய் ஊழியம் செய்வதினிமித்தமாக, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை உயர்த்துவார். கர்த்தருடைய ஊழியம் கனமானது. மேன்மையானது. மகிமையானது. நாம் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வது, நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். இந்தச் சிலாக்கியத்தை உண்மையாயும், உத்தமமாயும் நிறைவேற்ற வேண்டும்.

விசுவாசிகள் தங்களுக்குள்ளே சமாதானமாயிருக்க வேண்டும் (1தெச 5:13). ஜனங்கள் எல்லோருமே சமாதானமாகயிருக்க வேண்டும். சமாதானத்தை குலைத்துப் போடுகிற எல்லா காரியங்களையும் நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். சமாதானத்திற்கு தடையாகயிருக்கிற காரியங்களையெல்லாம் அகற்றவேண்டும். நமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, அந்த வேறுபாடுகளை அகற்றிவிட்டு, கருத்து ஒற்றுமை உண்டாவதற்கு முயற்சி செய்யவேண்டும். நம் மத்தியிலே சமாதானம் உண்டாவதற்குத் தேவையான எல்லா காரியங்களையும் கருத்தாய் நிறைவேற்ற வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு சமாதானமும் ஒற்றுமையும் அவசியம்.

விசுவாசிகள் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும் (1தெச 5:14). எல்லா சமுதாயத்திலும் ஒழுங்கில்லாதவர்கள் சிலர் இருப்பார்கள். இவர்கள் சமுதாயத்தின் எல்லா அந்தஸ்திலும் காணப்படுவார்கள். இவர்களுடைய ஒழுங்கின்மையினிமித்தமாய் இவர்களைக் கடிந்துகொள்ள வேண்டும். ஒழுங்கில்லாதவர்கள் தங்கள் ஆத்துமாக்களைக் கெடுத்துப் போடுகிறார்கள். இவர்களுக்கு சாந்தமாய் புத்தி சொல்லி, அவர்களுடைய ஆத்துமாக்களை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ள வேண்டும். ஒழுங்கில்லாதவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துப் போடுவதோடு, மற்றவர்களையும் கெடுத்துப் போடுவார்கள்.

விசுவாசிகள் திடனற்றவர்களைத் தேற்ற வேண்டும். இவர்களுடைய இருதயம் திடனில்லாமல் பயந்த சுபாவமுள்ளதாயிருக்கும். இவர்கள் எப்போதும் கவலையோடும், பயத்தோடும் இருப்பார்கள். வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்களைப் போல காணப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லவேண்டும். திடனற்றவர்களை அசட்டைபண்ணி ஒதுக்கி வைத்துவிடக் கூடாது. இவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். ஒருவேளை நம்முடைய ஆறுதலான வார்த்தைகள் இவர்களுக்கு மிகுந்த பிரயோஜனத்தைத் தரலாம். திடனற்றுப் போனவர்கள் தங்கள் வருத்தத்திலும் கவலையிலுமிருந்து மீண்டு, சந்தோஷமும் சமாதானமும் பெறலாம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பலவீனரைத் தாங்கவேண்டும். ஒரு சிலரால் எந்த வேலையையும் நேர்த்தியாகச் செய்யமுடியாது. இவர்களால் எந்த பாரத்தையும் சுமக்க முடியாது. சரீரப்பிரகாரமான பாரம் மாத்திரமல்ல, இவர்களால் மனதாலும் பாரம் சுமக்க முடியாது. வாழ்க்கையில் சிறிய பிரச்சனை வந்தாலும் சோர்ந்துபோய்விடுவார்கள். இவர்களுடைய பலவீனத்தை நாம் தாங்கவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும். பலவீனருடைய பாரத்தை நீக்கிப் போடுவதற்கு நாம் உதவிசெய்யவேண்டும் (1தெச 5:14).

விசுவாசிகளாகிய நாம் எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருக்க வேண்டும். சோதனைகளைச் சகித்துக் கொள்ள வேண்டும். எல்லா மனுஷரிடத்திலும் என்று சொல்லும்போது, நாம் நல்லோரிடத்திலும் தீயோரிடத்திலும் சாந்தமாயிருக்க வேண்டும். ஐசுவரியவான்களிடத்திலும் தரித்திரரிடத்திலும் சாந்தமாயிருக்க வேண்டும். நாம் செய்கிற எல்லா காரியங்களிலும் நன்மை உண்டாக வேண்டும். நம்மால் முடிந்த வரையிலும் பிறருக்கு உபகாரம் பண்ண வேண்டும். ஒருபோதும் மற்றவருக்கு உபத்திரவமாயிருக்கக்கூடாது (1தெச 5:14).

ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்கு தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும் (1தெச 5:15). பழிவாங்குதல் நமக்குரியதல்ல. பிறரை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணமே நமக்குள் வரக்கூடாது. மன்னிப்பதுதான் நம்முடைய சுபாவம். நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்த தப்பிதங்களை நாம் மன்னிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களை மன்னிக்கும்போது, நாம் செய்த தப்பிதங்களை தேவன் நமக்கு மன்னிப்பார்.

நமக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் நாம் எப்பொழுதும் நன்மை செய்ய நாடவேண்டும் (1தெச 5:15). தேவனுக்கு பிரியமானது எது என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனுக்கு பிரியமானதை மாத்திரம் நாம், செய்யவேண்டும். நமக்கு மனுஷர் எப்படிப்பட்ட காரியங்களைச் செய்தாலும், நாம் மற்றவர்களுக்கு எப்பொழுதும் நன்மை மாத்திரமே செய்யவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நமக்கும் தீங்கு செய்துவிடக்கூடாது. நம்முடைய ஆத்துமாவையோ, நம்முடைய சரீரத்தையோ நாம் அழித்துப்போடக்கூடாது. நமக்கும் நாம் நன்மையையே செய்யவேண்டும். நமக்கு மாத்திரமல்ல, நாம் மற்றவர்களுக்கும் எப்பொழுதும் நன்மை செய்ய பிரயாசப்படவேண்டும். பிறருக்கு நன்மை செய்வதற்கான வாய்ப்புக்களை தேடி கண்டுபிடித்து, அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் 1தெச 5 : 16-22

1தெச 5:16. எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.

1தெச 5:17. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.

1தெச 5:18. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1தெச 5:19. ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.

1தெச 5:20. தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்.

1தெச 5:21. எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

1தெச 5:22. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய புத்திமதி சொல்லுகிறார். நம்முடைய கடமைகள் நமக்கு மிகவும் முக்கியமானது. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை நாம் உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய வார்த்தையிலும், சிந்தையிலும், கிரியையிலும் கர்த்தரைப் பிரியப்படுத்தவேண்டும். அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு சொல்லுகிற ஒவ்வொரு புத்திமதியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது.

முதலாவதாக, "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" (1தெச 5:16) என்று விசுவாசிகளுக்குப் புத்திசொல்லுகிறார். நாம் கர்த்தருக்குள் விசுவாசமாயிருக்கும் போது, நம்மால் எப்போதும் சந்தோஷமாயிருக்க முடியும். எல்லா சூழ்நிலையிலும் நம்மால் சந்தோஷமாயிருக்க முடியும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் சந்தோஷமான ஜீவியம். நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்போதுமே சந்தோஷம் நிரம்பியிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" (1தெச 5:17) என்று பவுல் விசுவாசிகளுக்கு இன்னும் அதிகமாய்ப் புத்திசொல்லுகிறார். நாம் எப்பொழுதும் சந்தோஷமாகயிருக்க வேண்டுமென்றால், இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டும். ஜெபம் இல்லாமல் சந்தோஷமில்லை. சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஜெபம் மாத்திரமே ஒரே வழி.

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று பவுல் சொல்லும்போது, நாம் ஜெபம்பண்ணுவதைத் தவிர எந்த வேலையும் செய்ய வேண்டியதில்லை என்னும் பொருளில் பவுல் இப்படிச் சொல்லவில்லை. நாம் ஜெபம்பண்ண வேண்டிய வேளையில் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபத்திற்கு எந்தக் காரியமும் தடையாகயில்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய கடமைகளையும் நிறைவேற்றவேண்டும். ஜெபம்பண்ணவும் வேண்டும்.

நாம் ஜெபிக்கும் போது, நம்முடைய கைகளின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படும். நம்முடைய தொழில்களும், வியாபாரங்களும் ஆசீர்வதிக்கப்படும். இவற்றில் தடையில்லாத முன்னேற்றமுண்டாகும். நம்முடைய வேலைகளை ஜெபம் பண்ணாமல் செய்தால் நமக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்காது. ஆகையினால், நாம் ஜெபம்பண்ண வேண்டிய வேளைகளில், நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டுமென்று, பவுல் விசுவாசிகளுக்குப் புத்திசொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் (1தெச 5:18). நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவோமென்றால், நாம் எல்லாவற்றிலேயும் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்ய வேண்டுமென்று பிரியப்படுவோம். நம்முடைய எல்லா சூழ்நிலையிலும் நாம் கர்த்தரைத் துதிப்போம். வாழ்வானாலும், தாழ்வானாலும் நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்செய்வோம். எல்லாவற்றிலேயும் தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணும்போது, தேவனைப்பற்றி குறை சொல்ல நம்மிடத்தில் ஒன்றும் இருக்காது. நம்முடைய இருதயம் முழுவதும் கர்த்தரைத் துதிக்கிற துதியினால் நிரம்பியிருக்கும்.

எல்லாவற்றிலேயும் நாம் கர்த்தரை ஸ்தோத்திரம் செய்வது, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1தெச 5:18). நாம் இன்னும் சந்தோஷமாயிருக் வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். எல்லாவற்றிலும் நாம் ஸ்தோத்திரம் செய்யவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். நாம் தொடர்ந்து கர்த்தரைத் துதிக்கும்போது, அவரைத் துதிப்பதற்கான காரணங்கள் நம்முடைய ஜீவியத்தில் நிரம்பியிருக்கும். இருதயத்தில் கர்த்தரைத் துதிக்கும் துதிகளும் ஸ்தோத்திரங்களும் தாராளமாய்ப் பெருகியிருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், ஆவியை அவித்துப்போடாதிருக்கவேண்டும் (1தெச 5:19). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் அபிஷேகம் செய்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த அக்கினியை நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவித்துப்போடக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஜீவியத்தில் பற்றியெறியவேண்டும்.

எரிகிற விறகு கட்டைகளை அடுப்பிலிருந்து வெளியே எடுக்கும்போது, அக்கினி அவிந்துபோகும். அக்கினி அதிகமாய் எரியவேண்டுமென்றால், எரிகிற விறகு கட்டைகள் ஒவ்வொன்றையும் நன்றாய் எரியுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அவற்றை அனல்மூட்டி எழுப்பிவிட வேண்டும். அதுபோலவே நம்மிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானவரை அனல்மூட்டி எழுப்பிவிடவில்லையென்றால், நமக்குள்ளே இருக்கிற பரிசுத்த அக்கினி அவிந்துபோகும்.

எரிகிற அக்கினியின்மீது தண்ணீரை ஊற்றியும் அதை அணைத்துப்போடலாம். அல்லது அக்கினியின்மீது ஏராளமான மண்ணைப்போட்டும் எரிகிற அக்கினியை அவித்துப்போடலாம். நமக்குள் எரிகிற பரிசுத்த அக்கினியையும் இதுபோலவே அவித்துப்போடுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஏராளமான மாம்சசிந்தைகளையும், உலகப்பிரகாரமான ஆசாபாசங்களையும் கொண்டு வந்து குவிக்கும்போது, பரிசுத்த ஆவியானவரை நாம் அவித்துப் போடுவதற்கு வாய்ப்புள்ளது. நாம் உலகப் பிரகாரமான காரியங்களை மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருப்போமென்றால், நமக்குள்ளிருக்கிற பரிசுத்த அக்கினி அவிந்துபோகும். நம்முடைய ஆவியை அவித்துப்போடாதபடி, அதை எப்போதும் அனல்மூட்டி எரிய செய்யவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணக் கூடாது (1தெச 5:20). தீர்க்கதரிசனம் என்னும் வார்த்தை, கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கம் பண்ணுதல் என்னும் பொருளில் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிரசங்கம் எளிமையாக இருக்கலாம். என்றாலும் கர்த்தருடைய வார்த்தை பிரசங்கம் பண்ணப்படும்பொழுது, அதை அற்பமாய் எண்ணக்கூடாது. நமக்கு ஏற்கெனவே தெரிந்த சத்தியம் பிரசங்கம் பண்ணப்படலாம். அதற்காக அந்தப் பிரசங்கத்தை அற்பமாய் எண்ணி, அதை கவனமாய்க் கேட்காமல், அசட்டையாயிருந்துவிடக்கூடாது.

கர்த்தருடைய வசனங்கள் எல்லாமே நமக்கு முக்கியமானவை. நமக்குத் தேவையானவை. அவை நமக்குப் பயனுள்ளவை. கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாய், நம்முடைய சூழ்நிலைக்கேற்ப, நமக்கு அதிக பிரயோஜனமுள்ள வசனங்களை தீர்க்க தரிசனமாகச் சொல்லுவார். நாம் கர்த்தருடைய வசனத்தை நேசிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும்.

நமக்கு ஏற்கெனவே தெரிந்த வசனம் மறுபடியும் பிரசங்கம்பண்ணப்படும்போது, அந்த வசனத்தை அதிகமாய்த் தியானித்துப் பார்க்கவேண்டும். அந்த வசனத்தின் மூலமாய் கர்த்தர் நமக்கு சொல்ல விரும்பும் சத்தியத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கும் அவருடைய விருப்பத்திற்கும் நாம் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய கடமைகளை நாம் உண்மையாயும் சந்தோஷமாயும் நிறைவேற்ற வேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளவேண்டும் (1தெச 5:21). நம்முடைய நம்பிக்கை கர்த்தர்மீதுதான் இருக்க வேண்டும். பிரசங்கியார்மீதும், ஊழியக்காரர்மீதும் நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் மூலமாய் நம்மோடு பேசுவார் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்கள் மூலமாய் பிரசங்கிக்கப்படும் வசனங்களையும், சத்தியங்களையும் சோதித்துப் பார்க்க வேண்டும். அவற்றில் நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். நலமில்லாததை விட்டுவிடவேண்டும். வேத வசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிரசங்கியார் சொல்லுவது வேதவசனத்தின்படி சத்தியமானதா, இல்லையா என்பதை சோதித்துப் பார்க்கவேண்டும்.

நாம் எப்போதுமே சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தால், ஒரு காலத்திலும் ஒரு முடிவுக்கும் வரமாட்டோம். தொடர்ந்து சோதித்துக் கொண்டேயிருந்தால், நம்மால் எந்தத் தீர்மானமும் எடுக்க முடியாது. எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கிற நாம், கர்த்தருடைய கிருபையினால் ஒரு முடிவுக்கு வரவேண்டும். சோதித்துப் பார்த்து, அதன்பின்பு, அதில் நலமானதை நாம் பிடித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பிடித்துக் கொள்வது எல்லாமே நமக்கு நலமானதாகயிருக்க வேண்டும்.

அவை நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவை உதவிபுரியக்கூடியதாக இருக்கவேண்டும்.

பிரயோஜனமில்லாததை பிடித்துக் கொள்வது நமக்கு தேவையில்லாத பாரமாகயிருக்கும். தேவையில்லாத பாரத்தை சுமந்துகொண்டு, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஓடமுடியாது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம், பாரமான எல்லாவற்றையும் கீழே இறக்கி வைத்துவிட்டு, தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கிற ஓட்டத்தில், பொறுமையோடு ஓடவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும் (1தெச 5:22). நம்முடைய இருதயத்தில் பொல்லாங்கான சிந்தனைகள் தோன்றக் கூடாது. நம்முடைய ஜீவியத்தில் துன்மார்க்கமான கிரியைகளை நாம் செய்யக் கூடாது. பொல்லாங்கான சிந்தனைகளும், பொல்லாங்கான கிரியைகளும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப்போடும். நம்முடைய மனதைக் கெடுத்துப்போடும்.

நம்முடைய இருதயத்தில் சுத்தம் இருக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்தம் காணப்பட வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் கர்த்தருடைய சத்தியத்தை அன்போடு ஏற்றுக் கொள்வார்கள். சத்தியத்தை நேசிப்பார்கள். பாவத்தைக்குறித்து நாம் வெட்கப்படவேண்டும். பாவத்தை அருவருக்க வேண்டும். பாவத்தை அருவருக்காதவர்கள் சீக்கிரத்தில் பாவத்தில் விழுந்து விடுவார்கள். ஆகையினால் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுகிறது,கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு அவசியமாயிருக்கிறது.

முடிவுரை
1தெச 5 : 23-28

1தெச 5:23. சமாதானத்தின் தேவன் தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1தெச 5:24. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

1தெச 5:25. சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

1தெச 5:26. சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்.

1தெச 5:27. இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்ய வேண்டுமென்று கர்த்தர் பேரில் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன்.

1தெச 5:28. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயருக்காக ஜெபம் பண்ணுகிறார். சமாதானத்தின் தேவனிடத்தில் பவுல் விண்ணப்பம் பண்ணுகிறார். தெசலோனிக்கேயர் மத்தியிலே சந்தோஷமும், சமாதானமும், ஒற்றுமையும் நிரம்பியிருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்களுக்கு தேவனுடைய ஒத்தாசை தேவைப்படுகிறது. சமாதானத்தின் தேவனால் தம்முடைய பிள்ளைகளுக்கு சமாதானத்தை தாராளமாய்க் கொடுக்க முடியும். ஆகையினால் பவுல் சமாதானத்தின் தேவனிடம், தெசலோனிக்கேயருடைய சமாதானத்திற்காக விண்ணப்பம் பண்ணுகிறார் (1தெச 5:23).

தெசலோனிக்கேயர் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்பது பவுலின் ஜெபம். தேவன் தாமே அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறவர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது தெசலோனிக்கேயர் குற்றமற்றவர்களாய் இருக்க வேண்டும். தேவன் தாமே அவர்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் நாம் பரிசுத்தமாக்கப்படவேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் நம்முடைய கர்த்தர் பரிசுத்தமாக்க வேண்டும். கர்த்தர் நம்மைப் பரிசுத்தப்படுத்தும் போது, அவருடைய வருகையின் போது நாம் பரிசுத்தமாயிருப்போம்.

தேவனே நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவர். தேவன் நமக்குள் செய்கிற தம்முடைய பரிசுத்தமான கிரியைகளை பரிபூரணமாய்ச் செய்து நிறைவேற்ற வேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் குற்றமற்றதாய் காக்கப்படவேண்டும். இவ்வாறு காப்பது இயேசு கிறிஸ்துவின் கிருபை. பரிசுத்தமுள்ளவர்கள் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக சந்தோஷத்தோடு நிற்பார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கறை எதுவும் இல்லாதவாறு, கர்த்தர்தாமே நம்மை தம்முடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கவேண்டும்.

தேவனுடைய வாக்குத்தத்தம் நமக்கு ஆறுதலைத் தருகிறது. அவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவர். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறவர். கர்த்தரே நம்மை அழைக்கிறவர். அவர் உண்மையுள்ளவர் (1தெச 5:24). நம்மை அழைக்கிற தேவன் உண்மையுள்ளவரென்பது நமக்கு ஆசீர்வாதமான சத்தியம். கர்த்தருடைய உண்மையே நமக்குப் பாதுகாப்பு. நம்மை அழைத்தவர் நம்மை முற்றும் முடிய வழிநடத்திச் செல்ல வல்லவர். அவர் அப்படியே செய்கிறவர்.

தேவன் தமக்குப் பிரியமானதைச் செய்வார். நமக்கு நன்மையான காரியங்களை தேவன் அப்படியே செய்வார். நம்முடைய ஜீவியத்தில் தேவன் வைத்திருக்கிற சித்தம் நிறைவேறும். ஏனெனில் நம்மை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். தம்முடைய சித்தத்தை உண்மையாய் நிறைவேற்றுகிறவர். தேவன் நம்மிடத்தில் உண்மையுள்ளவராயிருக்கிற படியினால் தான், நாம் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோம்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயரை, தனக்காகவும், தன் உடன்ஊழியக்காருக்காகவும் ஜெபிக்குமாறு வேண்டிக் கொள்கிறார் (1தெச 5:25). விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஜெபிப்பதின் மூலமாய் நம்முடைய சகோதர சிநேகத்தை வெளிப்படுத்துகிறோம். நாம் ஊழியக்காரருக்காக ஜெபிக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு, நமக்கு நல்ல ஊழியர் அநேகரைக் கொடுப்பார். அவர்களுடைய ஊழியத்தின் மூலமாய் நாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்காக ஜெபிக்க வேண்டும். விசுவாசிகளும் ஊழியக்காரருக்காக ஜெபிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேயர் எல்லோரையும் வாழ்த்துகிறார். "சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்" (1தெச 5:26) என்று எழுதுகிறார். சில்வானு, தீமோத்தேயு ஆகியோர் பவுலோடுகூட சேர்ந்து தெசலோனிக்கேயரை வாழ்த்துகிறார்கள். ஒருவருக்கொருவர் வாழ்த்துவதன் மூலமாக, தங்கள் சகோதர சிநேகத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். நாம் ஒருவரையொருவர் வாழ்த்தும் போது, கர்த்தருக்குள் நாம் வைத்திருக்கிற அன்பு உறுதியாயிருக்கும்.

இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கும்படி செய்யவேண்டுமென்று பவுல் கட்டளை கொடுக்கிறார் (1தெச 5:27). இந்தக் கட்டளையை பவுல் கர்த்தர் பேரில் தெசலோனிக்கேயருக்கு ஆணையிட்டுச் சொல்லுகிறார். இந்த வாக்கியம் பவுலுடைய ஆலோசனை மாத்திரமல்ல இது அவருடைய ஆணையாகவும் இருக்கிறது.

பரிசுத்தமான சகோதரர் யாவர் மத்தியிலும் இந்த நிருபம் வாசிக்கப்பட வேண்டும். ஒருவேளை பவுல் எழுதிய இந்த நிருபம் அவர்களுக்கு புரியாத பாஷையில் இருக்குமென்றால், இந்த நிருபத்தை அவர்களுக்குப் புரிகிற பாஷையில் மொழிபெயர்த்து, அவர்களெல்லோருக்கும் வாசிக்க வேண்டும். பவுலின் நிருபத்தை முத்திரை போட்டு மூடிவிடக்கூடாது. புரியாத பாஷையில் வாசித்தால் ஒரு பிரயோஜனமுமில்லை. புரியும் விதமாக வாசிப்பதற்கு, அந்தந்த பாஷைகளில் நிருபங்களை மொழிபெயர்த்து வாசிப்பது அவசியமாயிருக்கிறது.

இந்த நிருபத்தின் முடிவுரையாக, பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தை தெசலோனிக்கேயருக்குச் சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென்" (1தெச 5:28). இயேசுகிறிஸ்துவின் கிருபை நம்மோடு கூடயிருப்பதுதான் நமக்கு மெய்யான சந்தோஷம். தேவகிருபை நமக்குள்ளே வெளிப்படவேண்டும். அது நமக்குள் நிரம்பி வழிய வேண்டும். நம்முடைய தேவைகள் எல்லாவற்றிற்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை போதுமானதாகயிருக்கிறது.